Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 01 | 17-07-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 149

## திறந்த நிலையில் உணவுப்பண்டம் வைத்திருப்போர் மீது நடவடிக்கை

ஆலயத் திருவிழாக்களின் போது ஆலய வீதிகளில் திறந்த நிலையில் இனிப்பு மற்றும் உணவுப் பொருள்களை விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் தெரிவித்தார். இதேவேளை அண்மையில் இணுவில் கந்தசுவாமி கோவில் வீதியில் திறந்த நிலையில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை உடனடியாக நிலத்தில் வெட்டிப் புதைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (88

# மக்களில் எழுபது வீதமானோர் ஆட்சி மாற்றத்தில் விருப்பம்

## வால்வெள்ளி முதல்துண்டு அதிகாலை மோதியது

வியாழன் கோளுடன் ஷுமேக்கர்லெவி வால்வெள்ளியில் முதற் துண்டான ஷுமேக்கர்லெவி - 9 இன்று அதிகாலை 12.30மணியளவில் மோதவிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஒரு கிலோ மீற்றர் அகலமும் நான்கு கிலோ மீற்றர் நீளமுமான வால்வெள்ளியின் 20 துண்டுகள் செக்கனுக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் தொடர்ந்து வரும் ஏழு நாட்களுக்கு மோதவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா எல்லை கிராமங்களில் ராணுவ அச்சுறுத்தல் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களில் சிறிலங்கா இராணுவத்தின் அச்சுறுத்தல் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மன்னார் வீதியிலும், யாழ். வீதியிலும் சேமமடுப் பகுதியிலும் சில தினங்களுக்கு முன்னர் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அப்பகுதி தமிழ்க் கிராமவாசிகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா நகரப் பகுதியை உள்ளடங்கியதாகவும் மற்றும் செட்டிக்குளம் பிரதேசத்தை உள்ளடங்கியதாகவும் சிறியதாகவும் பெரியதாகவும் இராணுவ காவல் நிலையங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் திடீர் என்று இரவு வேளைகளில் தமிழ்க் கிராமங்களுக்குள் புகுந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## மிதிவெடியைப் பரீட்சித்த சிறுவன் உடல் சிதறிப் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டைப்பகுதியில் கிடந்த மிதிவெடியை எடுத்து திருகிப்பார்த்த போது அது வெடித்ததில் பதினான்கு வயது சிறுவன் ஒருவர் உடல் சிதறிப்பலியானார் அவருடன் நின்ற அவரது சகோதரனான ஏழு வயது சிறுவன் காயங்களுடன் உயிர் தப்பினார்.

### சகோதரன் படுகாயம்

மேற்படி சம்பவத்தின் போது பலியான சிறுவன் வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து வந்து கொட்டடி சிவன் பண்ணை வீதியில் வசித்து வந்த இரத்தினசிங்கம் திசாநாதன் (வயது 14) என்பவராவர் இவரது சகோதரனான இரத்தினசிங்கம் கஜேந்திரன் (வயது 7) என்பவர் சிறுகாயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி,88)

## காணாமல்போன 168 பேர் குறித்து

## இன்று விசேட படகுச் சேவை

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று கிளாலி-பூநகரி விசேட படகுச்சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## கலந்துரையாடல்

பருத்தித்துறைகோட்டத்திற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளிற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு வடஇந்துமகளிர் கல்லூரியில் நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொளளப்படுகின்றனர்.

## மூன்று தமிழர் கைது

(கொழும்பு)

சற்பிட்டிப் பகுதியில் விசேட பொலிஸ் அணியொன்று சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளது.

இச்சுற்றிவளைப்பின்போது மூன்று தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அப் பொலிஸ் அணி தெரிவித்துள்

## ராணுவபுலனாய்வு அறிக்கைதெரிவிப்பு

(கொழும்பு)

**வாக்காளர்களில் எழுபது சத விகிதத்தினர் வேறொரு அரசாங்கம் பதவிக்கு வருவதனை விரும்புகின்றனர் என்பது இராணுவ புலனாய்வு சேவையினர் நடத்திய இரகசிய கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது. மேலும் ஐ. தே க வினரின் ஊழல், துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும், யுத்தம் தொடர்பாகவும் கருத்துக் கணிப்பு இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.**

இது குறித்து தெரிவித்த 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் முப்பது சத வீத வாக்காளர்கள் யுத்தம் முடிவுக்கு வருவதை விரும்புகின்றனர் எனவும், அறுபது சதவீதமான வாக்காளர்கள் ஐ தே. க. அரசாங்கத்தின் ஊழல், அதிகார துஷ்பிரயோகம் குறித்து கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

இக் கருத்துக் கணிப்பில் கலந்துகொண்டோரில் எழுபது சதவீதத்தினர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்குப் பதிலாக, புதியதொரு அரசாங்கம் அமைவதையே விரும்புகின்றனர் என மேலும் அவர் தெரிவித்தார்.

## எதிரணி பிரசாரக்கூட்டம் இன்று ஆரம்பமாகிறது

எஸ்,டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஹொரகொல்ல சமாதியில் சகல வேட்பாளர்களும் சத்தியப்பிரமாணம்செய்தபின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்றுஆரம்பமாக உள்ளது,

சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையில் சகல உறுப்பினர்களும் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளதாகவும் கலந்துகொள்ளும் பிரசாரக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## ஐ. தே. க. கூட்டத்திற்கு வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

கண்டியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வமான ... வகித்தார்

இக் கூட்டத்தில் அமைச்சர் சௌ. தொண்டமான், காமினிதிசாநாயக்கா, அநுரா

யப்பட்டுள்ளதாகவும் அப் பொலிஸ் அணி தெரிவித்துள்ளது.

மாணம் செய்யவுள்ளதாகவும் அகுனையடுத்து நிட்டம்புவையில் சந்திரிகா குமாரணதுங்கா உட்பட பலமுக்கியஸ்தர்கள்

சியின் உத்தியோகபூர்வமான முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு ஜனாதிபதி டி பி விஜேதுங்கா தலைமை

காமினிதிசாநாயக்கா, அநுரா பண்டாரநாயக்கா ஆகியோர் பிரதான பேச்சாளர்களாக

(6ஆம் பக்கம் பார்க்க)

# காணாமல்போன 168 பேர் குறித்து விசாரணைக்கு வற்புறுத்து

[லண்டன்]

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் 1990 செப்டெம்பர் 9 இல் காணாமற் போன சுமார் 168 பேர் தொடர்பான பெயர் விபரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா கோரியிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பாக இவ் வருட ஆரம்பத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிகைகை ஒன்று குறித்து ஹமில்டன் இக் கோரிககையை விடுத்தார் காணாமற்போன 68 சிறுவர்களினதும் சுமார் 100 பேரினதும் பெயர் விபரங்களை தமக்கு அனுப்பி வைத்தால் இச் சம்பவம் தொடர்பாக விசாரணைக் குழு ஒன்றை அமைக்க முடியும் என ஹமில்டன் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து சர்வதேசமன்னிப்புச் சபை காணாமற் போன இந்த 68 பேரினதும் பெயர் விபரங்களை அவருக்கு அனுப்பி வைத்துள்ளது. விசாரணைகள் சர்வதேச தரத்திற்கு நடத்தப்படுவதை உறுதி செய்யும் படி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# புதன்கிழமை விளையாட்டு அரங்கு

அனேகரின் விருப்பத்திற்கு இணங்க எதிர்வரும் 20-ம் திகதி முதல் விளையாட்டுஅரங்கு புதன் கிழமைகளில் வெளிவரும்.

# தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரிப்பு

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்த தினத்தில் இருந்து நேற்று முன்தினம் வரை அறுநூற்றியொரு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்ததில் இருந்து வன்முறைகள் அதிகரித்துச் செல்வதாகவும் சராசரியாகத் தினம் நூறுக்கு மேற்பட்ட சம்பவங்கள நடைபெற்று வருவதாகவும் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு சகல பொலிஸ் பிரிவு அத்தியட்சகர்களுக்கும் விசேட பணிப்பு வழங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு வன்முறைகளில் ஈடுபடுபவருக்கு பின்னணியில் நிற்பவர் யார்? வன்முறைகளுக்கு என்ன காரணம்? என்பது தொடர்பாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளுமாறும் உடனடியாக தேர்தல் வன்முறை தொடர்பாக

(6ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைகளில் காயமடைந்த எதிரணி ஆதரவாளர்கள் கைது

தேர்தல் வன்முறைச் சம்பவங்களின்போது காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களையும் பொலிசார் கைது செய்து வருவதாக தெரியவருகின்றது.

இதேவேளை, வன்முறையில் ஈடுபடும் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் மேல் பொலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணி பொலிசாரை குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் ஆதரவாளர்கள் மீதுகொலை மிரட்டல்களும், அரசியலை விட்டு ஒதுங்குமாறு வற்புறுத்தல்களும் படையினரால் விடுக்கப்பட்டு வருவதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தேர்தலை முன்னிட்டு விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு விசேட பொலிஸ் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு பொலிஸ் மா அதிபர் அனுமதி அளித்துள்ளார்.

இப் பொலிஸ் பிரிவைச் சோந்த ஒருவர் நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றுவார் என்றும், விசேட பிரிவைச் சேர்ந்தவர்களே தேர்தல் வன்முறை தொடர்பாக கட்சி சாாபற்ற விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்றும் தெரியவந்துள்ளது

# யாழ். மாவட்ட பாரா௫. தேர்தலை ஜனாதிபதி ஒத்திவைக்கவேண்டும்

## மனித உரிமைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்தினால் அது சுதந்திரமாக இருக்கமாட்டாது எனவே அங்கு தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கையை ஏற்று இவ்விடயத்தில் ஜனாதிபதி விஜேதுங்கா உடனடியாக தலையிட வேண்டும் என மனித உரிமைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி உயர் நீதிமன்றத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இக் குழு கேட்டுள்ளது.

இது பொதுமக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக உள்ளதாலும் யாழ் மாவட்டத்தில் சுதந்திர தேர்தல் நடத்த முடியாது என்பதாலும் இப்பிரச்சினையை உயர் நீதிமன்றிற்கு கொண்டுசெல்லலாம் என இக் குழுவின் பொதுச்செயலர் டாக்டர் சூரிய விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து தமிழர் பெருமளவில் யாழ். வருகை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பெருமளவிலான தமிழ் மக்கள் வட பகுதிக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர், அண்மையில் கொழும்பில் பொலிசாரும், ராணுவத்தினரும் தமிழர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுத்துவருவதையடுத்து இம் மக்கள் வடபகுதி திரும்புவதாககதெரிவிக்கப்படுகின்றது வீதிளிலும், பொது இடங்களிலும், பஸ் வண்டிகளிலும் தமிழ் மக்கள் அரச படைகளால் கைது செய்யப்பட்டுவருவதாக அங்கிருந்து திரும்பியவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டும் கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பில் தமிழர்கள் அதிகமாக வாழும்பகுதிகளிலும் விடுதிகளிலும் படையினர் அடிக்கடி சுற்றிவளைத்து தேடுதல் நடத்துவதாகவும் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் படையினரால்இச் சந்தர்ப்பங்களில் கைதாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவங்களையடுத்து கொழும்பில் படையினரின் கெடுபிடிகளிலிருந்து தப்பிப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகை மூலமே தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் குடாநாட்டில் போட்டியிடும் வேட்பாளர்கள் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு தாம் தமிழ் மக்களிடம் நேரடியாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட முடியாமல் உள்ளதாகவும், தமது பிரசாரங்களை பத்திரிகை மூலமாகவே வெளியிடவுள்ளத்தாகவும் அறிவித்துள்ளனா.

யாழ். கச்சேரியிலுள்ள தேர்தல் அலுவலகத்தை தெல்லிப்பழைக்கு மாற்றும்படி அரசு விடுத்த பணிப்பு நிறைவேற்றப்படாததையடுத்து, தெல்லிப்பழையில் அமைக்கப்பட்ட தனிநபர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஒருங்கிணைப்பு நிலையம்

(கொழும்பு)

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பு நிலையம் ஒன்று இம்முறை அமையவுள்ளது

இந்நிலையம் இராஜகிரியா

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மிருதங்கம்

ஒரு மிருதங்கத்திற்கு சாதம் போட ரூபா 100. கைவசம் புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு கோவிந்தபிள்ளை விஜய குமார், 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (8811)

### விற்பனைக்கு

நான்கு மாதங்கள் நிரம்பிய வெள்ளை நிற போமறேனியன் பெண் நாய்க்குட்டியும், 1 1/2 வயதுடைய அல்சேஷன் ஆண் நாயும் விற்பனைக்குண்டு. | K. நடேசன் ''நந்தினி வாசா'' 15, மலர்மகள் வீதி, அரியாலை. (8840)

## சிறுவர்-பாடசாலையும் படிப்பகமும் திறப்பு

(தொல்புரம்)

இராணுவ நடவடிக்கைகளினால் தமது சொந்த வதிவிடங்களை விட்டு இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி வசதிகளை மேம்படுத்தும் முகமாகவும், ஊக்குவிக்கும் பொருட்டும், இலவச சிறுவர் பாடசாலையும், படிப்பகமும் அண்மையில் வட்டுக்கோட்டையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த அரும்பெரும் பணியினை காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினர் வட்டுக்கோட்டையில் இயங்கிவரும் யாழ்ற்றன் கல்லூரியில் ஆரம்பித்து வைத்துள்ளனர். இங்கு ''முன்பள்ளிக் கலைத்திட்டத்திற்கு'' அமைவாக பாலர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. அத்தோடு இலகுவான முறையில் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இங்குள்ள படிப்பகத்தில் கல்வி நூல் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன இந்த கல்வி வசதிகள் 'கொண்ட' நற்பணியினால் பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாலர்களும், வயதுவந்த மாணவர்களும் மிக்க பயனடைந்து வருகின்றனர். (41)

## பாராட்டு விழா

ஆவணக் காப்பகம் ஒன்றை நிறுவும் முயற்சியில் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் குரும்பசிட்டி இராசரத்தினம் தம்பதிகளுக்கான பாராட்டு விழாவும் ஆவணக்

## கண்ணீர் சிந்திய ஐரோப்பியபொறியியலாளர்

(கொழும்பு)

நெதர்லாந்து நாட்டுபொறியியல் நிபுணர் ஒருவருக்கு புத்தளத்தில் கண்ணீர் சிந்தும் அனுபவமேற்பட்டது,

டச்சுக்காரர் இலங்கையில் ஆட்சிபுரிந்தபோது நிர்மாணிக்கப்பட்டு தற்போது தூர்ந்து போயுள்ள கால்வாய் ஒன்றை பார்வையிடச்சென்ற போது, புத்தளத்தில் இடம்பெற்ற தேர்தல் வன் செயலைத் தடுக்க பொலிஸார் பாவித்த கண்ணீர் குண்டினால், மேற்படிபொறியியலாளர் கண்ணீர் சிந்திய நிலையில் கொழும்பு திரும்பினார்.

## சைக்கிள் ஓட்டம்

ஆண்களுக்கான 35 மைல் சைக்கிளோட்ட நிகழ்வு யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி பல்கலைக்கழக பிரதான வாயிலில் முடிவடையும்.

## 60-வது அகவை விழா

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் திரு நா. காசிவிசுவநாதனின் 60வது அகவைவிழா நாளை பிற்பகல் ஐந்து மணியளவில் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டிகள்

மேஜர் முரளி கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1-30 மணியளவில் சண்டிலிப்பாய் இரட்டையபுர வைரவர் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

## விளையாட்டுப் போட்டி

லெப். செல்லக்கிளி அம்மான் பாலர் படிப்பகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியிலுள்ள வாலையம்மன் சனசமூக நிலைய முன்றலில்நடைபெறவுள்ளது.

## 90 லட்சம் ரூபா ஜேர்மனி உதவி

வடக்கு - கிழக்கில், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புனர் வாழ்வுக்காக, ஜேர்மன் அரசு யுனிசெப்பினூடாக 90 இலட்சம் ரூபா வழங்கவுள்ளது.

இந் நன்கொடைப் பணம் யுனிசெப்பின் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு பயன்படும் என கொழும்பிலுள்ள யுனிசெப் அலுவலகம் அறிவித்துள்ளது.


எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ் ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ் ரால்கம்பவுடர்





## நினைவு கூருகின்றோம்...

### 17-07-1994...

1985-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - கொத்தியாவளையில் சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். பயஸ்** (அந்தோனிப்பிள்ளை ஜெஸ்லி-புதூர் - மட்டு)

1986-ம் ஆண்டு முல்லைத்தீவு - தண்டுவான் பகுதியில் பேருந்து ஒன்றின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்.

மன்னார் - பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 05 தமிழிளைஞர்கள்.

1987-ம் ஆண்டு யாழ் - தெல்லிப்பழையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**பதுமன்** (குயின்ரன் குரூஸ் - பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோயில் - மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வரதன்** (சின்னத்தம்பி சச்சிதானந்தம் - மாமுனை, செம்பியன்பற்று - யாழ்)

1989-ம் ஆண்டு சாவகச்சேரி - முகமாலைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**பவுன்-நிரு** (சிவப்பிரகாசம் வைகுந்தவாசன்-புலோப்பளை மேற்கு - பளை)

முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**உதயன்** (கந்தசாமி உதயகுமார் - பங்கிலிட்டி, குப்பிளான் - ஏழாலை - யாழ்)

சமூகவிரோதிகளால் அம்பனைச்சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான, நில அளவையாளரான,

**ஆ. மகாலிங்கம்** (மணிமகால்- தில்லைகலட்டி, விழிவிட்டி - அம்பனை)

1990-ம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப். நந்தன்** (வீரகத்தி இராஜேந்திரம் - நெடுங்கேணி - மணலாறு)

**மிதுலன்** (மாணிக்கம் சிறிகரன்-அளம்பில்-மணலாறு)

**கபில்** (சுப்பிரமணியம் முருகேந்திரன்-உடையார்கட்டு - முல்லைத்தீவு)

**ஜாசீர்** (சிவக்கொழுந்து கிரிசாந்தன் - சமணங்குளம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**குணம்** (இராஜேந்திரம் பாஸ்கரன் - கூழாமுறிப்பு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**சாள்ஸ்** (- - - - -)

மட்டுநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்து கருகியநிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 09 தமிழர்கள்.

திருமலை - தம்பலகாமம் பகுதியில் முஸ்லீம் ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்:

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு ...

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



மேஜர் கோபு / ரதீஸ்
(பத்மநாதன் கோபுநாதன்)

| தமிழீழ மண்ணில்: | தாயகமீட்பில்: |
|---|---|
| 04 - 04 - 1970 | 17 - 07 - 1991 |

ஈழவிடுதலையை என்றும் நேசித்ததால்
பாசத்தைத் துறந்து பாசறை சென்றவன்
கொட்டும் குண்டு மழையில் கோபு - நீ
தமிழீழ விடுதலைக்காய் நனைந்தவன்
நல்ல தம்பியின் தானைக் கூட்டத்தில்
கொள்கையொடு குன்றுயர்ந்தனை.

சமரபாகு,
இலக்கணாவத்தை,
உடுப்பிட்டி

இங்ஙனம்
பத்மநாதன் குடும்பத்தினர்.

(8831)

## நீங்காத நினைவுகள்



வீரச்சாவு
22. 7. 1991

திதி- 17. 7. 1991

லெப். இளஞ்செழியன்
வாஞ்சிநாதன்
(யோகேஸ்வரன் அரவிந்தன்)

(ஆனையிறவு), புல்லாவெளியில் நடைபெற்ற மானப்போரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்.

வரும் குரும்பசிட்டி இராசன் கரத்தினம் தம்பதிகளுக்கான பாராட்டு விழாவும் ஆவணக் காப்பக அறிமுகம் மற்றும் கண் காட்சியும் கண்டி சிட்டி மிசன் மண்டபத்தில் எதிர் வரும் ஞாயிறன்று பிற்பகல் இரண்டு மணியளவில் நடை பெறவுள்ளது இவ் விழாவை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் ஏற்பாடு செய்துள் ளது.

## தங்கப் பதக்கம் வென்றார்

யாழ் மாவட்ட லியோ கழ கங்களுக்கிடையில் மாவட்ட லியோ கழகங்களினால் நடா த்தப்பட்ட தமிழ் நாவன்மைப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி லியோ கழகத்தைச் சேர்ந்த கே. ஜெயநிதி தங்க ப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டார். யாழ். மத்திய கல்லூரி லியோ கழகத்தைச் சேர்ந்த எல். ஸ்ரீதரன் இரண் டாம் இடத்தையும் சாவகச் சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி. தயாபரன் மூன் றாம் இடத்தையும் பெற்ற னர். லியோ கழகங்கள் செய ற்படும் சகல பாடசாலை மாணவர்களுக்குமிடையே நடாத்தப்பட்ட ஆங்கில நாவ ன்மைப் போட்டியில்சுண்டுக் குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி கிருஸ்ணாள் சுப்பிரமணியம் தங்கப்பதக்க த்தை வென்றார். யாழ்ப்பா ணக் கல்லூரியைச் சேர்ந்த ஏ. கிருசாந்தன் இரண்டாம் இடத்தையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி அனுலோஜா பத்மபா லன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் மாவட்ட கருத் தரங்கில் வைத்து வழங்கப் படும்.




அழகிய கொள்கலன்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.



# பணி நிலை வெற்றிடங்கள்

கீழ்க்காணப்படும் பணி நிலைகளுக்கான விண்ணப்ப ங்கள் கோரப்படுகின்றன.

(1) காசாளர்:- தனியார், அரசநிறுவனங்களில் காசாளராகப் பணிபுரிந்த அனு பவம்.

(2) உள்ளக கணக்காய்வாளர்:-
[அ] க. பொ. த. உயர்தர பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான கல்வித்தரம்.
[ஆ] தனியார், அரச நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வாளராகப் பணிபுரிந்த அனுபவம்

(3) பாதுகாப்பு ஊழியர்
(4) முச்சக்கர மிதிவண்டி ஓட்டுனர்கள்.
(5) நோயாளர் பராமரிப்பாளர்
(6) உணவு பரிமாறுபவர்
(7) தேநீர் தயாரிப்பாளர்

மேற்படி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 22-7-94-ற்கு முன்னர் நோயாளர் நலன் புரிச் சங் க்த்தலைமச் செயலகம் இல. 572, கேணல் கிட்டுசாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

★ ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
★ 22-7-94-க்கு முன்னர் நேரிலோ, தபால் மூலமோ அனுப்பிவைக்கலாம்.

நிர்வாகக் குழு
நோயாளர் நலன்புரி சங்கம்.

[8829]


இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

1991-ம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது, வெற்றிலைக்கேணியிலிருந்து முன்னேற்முயன்ற இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**நாதன்** (சின்னத்தம்பி யோகராசா - புதுநகரம், மல் வத்தை - அம்பாறை)
**தழந்தை** (செல்வராஜா இராஜகோபால்- பன்குடா வெளி - மட்டு)
**2-ம் லெப். ஜோன்** (இராஜேந்திரம் உதயகுமார் 2-ம் வாய்க்கால், பெரியவெளி- திருமலை)
**ஈதா** (அர்ச்சுன் மகேந்திரன் - சண்டிவீதி, விளாங் குளம் - திருமலை)
**கீர்த்தி** (சிவகுரு ரவிச்சந்திரன் - 6-ம் குடியிருப்பு- திருமலை)
**யாழன்** (செல்லையா ரவி - இலுப்பைக்குளம் - வவு னியா)
**2-ம் லெப். பாரதி** (சின்னத்தம்பி நந்தகுமார் - 154-ம் கட்டை, முறிகண்டி - கிளிநொச்சி)
**அறிவொளி** (கணேஸ் சுபாஸ்கரன் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)
**லெப். ரவியப்பா** (சுப்பிரமணியம் உருத்திரன் -அரி ப்பு வீதி, சிலாவத்துறை - மன்னார்)
**பாலச்சந்திரன்** (பியதாச ஜேசுராசன் - மடுவீதி - மன்னார்)
**மேஜர் கோபு - ரதீஸ்** (பத்மநாதன் கோபுநாதன்- இலக்கணவத்தை, உடுப்பிட்டி - யாழ்)

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்,
**மேஜர் நகுலேஸ்வரன் - நகுலேஸ்மாமா** (சிங்காரவடிவேல் தவக்குமார்-வல்வெட்டித்துறை)
**கப்டன் அங்கதன்** (ஜெயதிலகா நிசாந்தன்- புளியந் தோட்டம், சுன்னாகம் -யாழ்)
**2-ம் லெப். செல்லக்குட்டி** (வீரகத்தி ரவிச்சந் திரன்- நெல்லியடி, கரவெட்டி - யாழ்)
**2 ம் லெப். லக்ஷ்மன்** (கிருஷ்ணன் இராமச்சந்தி ரன்- தென்மூலை - அச்சுவேலி)
**இராமன்** (சக்திவேல் சிறிபாலகிருஷ்ணன் - திருவில் ஒழுங்கை - வல்வெட்டித்துறை)
**ரமேஸ்** (சின்னத்துரை சபேசன் - கொற்றாவளை, அளவெட்டி வடக்கு- யாழ்)
**நித்தியானந்தன்** (சிவசிதம்பரம் சிவகுமார் - சுன் னாகம் மேற்கு - யாழ்)

மானப்போரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்.

மண்ணும் மரமும்
விண்ணும் நிலவும்
கடலும் அலையும்
காற்றும் நெருப்பும்
கண்ணுக்குள் நின்று
கதைகள் சொல்வது போல் - எம்
நெஞ்சுக்குள் நீயும்
நீங்காமல் வாழ்கிறாய்.

17.7.94இல் மயிலியதனை, தொண்டைமானாற் றில் உள்ள இவரது வீட்டில் நடைபெறும் திதியில் கலந்து மதியபோசனத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

- குடும்பத்தினர்.

மயிலியதனை,
தொண்டைமானாறு

(சி-9944)

**அலெக்ஸ்** (அழகு சத்தியசீலன் - கூட்டுறக்கரை வீதி, குருநகர்-யாழ்)
**செங்கண்ணன்** (இராசரத்தினம் ரகுநாதன் - துன் னாலை, கரவெட்டி - யாழ்)
**சிவபாலன்** (சின்னத்தம்பி ஜெயராஜ் - விக்கினேஸ் வரா வீதி, சங்கானை - யாழ்)
**சுபைர்** (கந்தசாமி இராஜேந்திரம் - அரியாலை கிழக்கு - யாழ்)
**புஸ்பன்** (பிரகாசம் நோயல் தோமஸ் - நெடுந்தீவு மத்தி-யாழ்)
**பரணி** (முத்துவேல்காந்தலிங்கம் - வேலணை கிழக்கு- யாழ்)

மணலாற்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**கோபு** (வெற்றிவேல் வசந்தன்-சிவன்கோயிலடி வீதி, பண்ணாக்கட்டை - பருத்தித்துறை)

யாழ்- அடைக்கலமாதா கோயிலடியில் யோரா லிகள் வைத்தியமனையில் பெற்றோமாக்ஸ் வெடித்த தில் எமைப்பிரிந்த,

**கோடீஸ்வரன்** (அமிர்தநாதன் பாலேந்திரா, கஸ்தூ ரியார் வீதி- யாழ்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9939)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டம்:

# இத்தாலி அதிரடியாக தொடங்கியது; பிரேசில்வலுவாகமோதவேண்டியிருந்தது


### இத்தாலி - பல்கேரியா

'94 உலகக் கிண்ணப் போட்டியின் முதலாவது அரையிறுதியாட்டம்இத்தாலி, பல்கேரிய அணிகளுக்கிடையில் நடைபெற்றது. பலம் வாய்ந்த ஜேர்மனியைத் தோற்கடித்து பல்கேரியாவும், ஆட்டத்துக்கு ஆட்டம் தம் திறனை வளர்த்து வந்த இத்தாலியும் எவ்வகையில் எதிர் கொள்ளப்போகின்றனர் என்பது ரசிகர்களின் வினாவாக இருந்தது.

இத்தாலி தன் விளையாட்டு உத்தியை வேறுவகையில் மாற்றிக் கொண்டே களத்தில் இறங்கியிருப்பது போலத் தெரிந்தது. கடந்த ஆட்டங்களில் பின் பற்றிய முறைகள் ஆட்டவேளையின் இறுதி நிமிடங்களில் தமக்கு நெருக்குதல்களைக் கொடுத்ததால் இவ்வாட்டத்தை இத்தாலியர் மின்னல் வேகத்திலேயே ஆரம்பித்தார்கள். முதல் 30 நிமிடங்கள் இத்தாலி விளையாடிய வேகமும், பல்கேரியாவுக்குக் கொடுத்த அழுத்தமும் பிரமிப்பைத்தருவன. ஆரம்பகட்டத்திலேயே தடைகளை நீக்கி விடுதல் என்ற எண்ணத்தில் அவர்கள் ஆடிய முறை பெரும் நன்மையை அவர்களுக்குக் கொடுத்தது. ஆட்டம் தொடங்கி 21-வது நிமிடம் 30 யார் தொலைவிற்கு அப்பால் வைத்து கொடுத்த நீண்டதூர உதை ஒன்றின் மூலம் றொபேட்டோ பாகியோ இத்தாலிக்கு முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். அதே வேகத்தில் அடுத்த ஐந்தாவது நிமிடம் றொபேட்டோ பாகியோ இன்னொரு கோலையும் பெற்றுக் கொடுக்க முதல் 30 நிமிடங்களில் இத்தாலி 2-0என்றவாறுமுன்னணியில்திகழலாயிற்று இதேவேளை பல்கேரியா பலவாறு முனைந்தும் இத்தாலியின் அழுத்தத்துக்கு மேலாக கோல் போட்டுவிட முடியவில்லை எனினும் 44-வது நிமிடத்தில் பல்கேரியாவுக்கு கிடைத்த பெனால்ட்டி உதையொன்றை ஸ்டொயிஸ்கோவ் கோலாக மாற்ற இடைவேளையின் போது 2—1 என்றவாறு இத்தாலி முன்னணியில் திகழ்ந்தது.

இடைவேளையின் பின் பல்கேரியா சளைக்காமல் இத்தாலி மீது தன் அழுத்தத்தைப் பிரயோகித்தது. இயல்பாகவே இரு பகுதியினரும் எதிர்த்தரப்பினர் மீது அழுத்தத்தைப் பிரயோகித்தாலும் பல்கேரியா இன்னொரு கோல் போட முழுப் பிரயத்தனமும் செய்தது.

இருந்தும் இத்தாலியின் பாதுகாப்பு வலயத்தை உடைக்க முடியவில்லை பலகோவ், ஸ்டொயிஸ்கோவ், லெட்ச்கோவ் போன்ற திறமையான ஆட்டக்காரர்கள் தம் திறமையை நிரூபிக்கத் தவறவில்லை. பல்கேரிய கோல் காப்பு வீரர் சிறந்த முறையில் பணியாற்றியிரா விட்டால் இன்னும் ஓரிரண்டு கோல்கள் போடப்பட்டிருக்கலாம் மீளவும் இறுதி ஐந்து நிமிடங்கள் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை பல்கேரியா கொடுத்தது. ஆட்ட முடிவில் அவர்கள் பெரிதாக கலங்கவில்லை காரணம் உலகச் சம்பியனான ஜேர்மனியை கால் இறுதி ஆட்டத்தில் தோற்கடித்த மகிழ்ச்சி அவர்களுக்கு மாறாது இருந்திருக்கக் கூடும்



### பிரேசில் - சுவீடன்

'94 உலகக் கிண்ணப் போட்டியின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி பிரேசிலுக்கும், சுவீடனுக்கும் இடையில் நடைபெற்றது. முதற் சுற்றில் ஒரே பிரிவில் இவ்விரு நாடுகளும் முன்னொரு முறையும் மோதின போட்டி சரிசமமாயிற்று பிரேசில் இம்முறை வெற்றி வாய்ப்புக்குரிய நாடுகளுள் ஒன்றெனக் கருதப்படுவது இப்போட்டியில் அவதானிக்கத்தக்கதாக இருந்த முக்கிய அம்சம் ஒன்றுண்டு சுவீடன் அணி முற்றுமுழுதாக தறகாப்பு முறையில் ஆட முனைந்தமையே அதுவாகும். இருந்தும் ஆட்டம் தொடங்கியது முதல் சுவீடனின் வியூகத்தை உடைக்க பிரேசில் கடும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆட்டம் தொடங்கி 30-வது நிமிடம் கோல்காப்பு வீரரையும் தாண்டி கோல் வாயிலில் பந்தைக் றொமாரியோ உள்ளேதள்ள யாரும் நினைக்க முடியாத அளவில் செயற்பட்ட சுவீடன் வீரர் அதை அப்பால் உதைத்தது அற்புதமானதொரு கட்டமாகும். திரும்பவும் அந்தப்பந்தை உடனடியாகவே மீண்டும் பிரேசில் வீரன் அடிக்க அதுகம்பத்தில் பட்டுகளத்தினுள் வந்து திசைமாறிற்று. பிரேசில் அருமையானதொரு சந்தர்ப்பத்தை இழந்தது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் ஒரு சிலநிமிடங்களில் கிடைத்தும் றொமாரியோவால் அதனைப் பூரணப்படுத்த இயலவில்லை இடைவேளை வரை பிரேசில் என்னதான் முயற்சித்தும் ஒரு கோலைத் தானும் பெற்றுக்கொள்ள இயலவில்லை.

இடைவேளையின்பின் ஆட்டம் ஆரம்பித்த போதும் விளையாட்டுப்பாணிமாறவில்லை. சுவீடன்தற்காப்புமுறைபிரேசில் Attacking முறை,இதனால்பிரேசில் கோல்காப்பு வீரருக்குவேலைஅதிகமில்லாதுபோயிற்றுசுவீடன் சில தடவைகள் அருமையாக Attack செய்தது இருந்தும் அவர்களின் நோக்கம் தற்காத்துக்கோள்வதாகவே இருந்தது இதற்கு பெனால்டி உதைவரை ஆட்டத்தைக் கொண்டு போகும் நோக்கம் சுவீடனுக்கு இருந்திருக்கலாம் அதை முறியடிப்பதே பிரேசிலின் நோக்கமாகத் தெரிந்தது இதன் காரணமாக பெரும் சுமைக்குட்பட்டவர் சுவீடனின் கோல் காப்பு வீரர் ராவெல்லிதான். அவர் ஆச்சரிப்படத்தக்க வகையில் பந்துகளைத்தடுத்துபிரேசிலுக்குப் பெரும் தடையானதொரு தடுப்புச் சுவராக இருந்தார் இதற்கிடையில் இடைவேளையின் பின் 20 வது நிமிடம் சுவீடனின் வீரர் ஒருவர் நடுவரால் வெளியேற்றப்பட்டார். ஆட்டம் நிறைவு பெற 9 நிமிடங்கள் இருக்கும் வேளையில் றொமாரியோ கோல் பிரதேசத்தினுள் வந்த பந்தொன்றைச் சாதுரியமாகத்தன் தலையால் திருப்பி கோலாக்கினார் பெறப்பட்ட அந்த ஒரு கோல் மட்டும் தான் ஆட்டத்தை நிர்ணயித்தது சுவீடன் வெளியேறியது. பிரேசில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது,

## உலக கிண்ணம் யாருக்கு?

### பிரேசில்

நான்கு உலகக் கிண்ணப் போட்டிகளில் நிறைவாட்டத்திற்குத் தகுதி பெற்ற பிரேசில் 50ல் உருகுவேயிடம் தோல்விகண்டது. 58, 62, 70ம் ஆண்டுகளில் மூன்று முறைகள் உலகக் கிண்ணத்தை வென்றது. முறையே சுவீடன், செக்கோஸ்லோவாக்கியா, இத்தாலி ஆகியநாடுகளை பிரேசில் வெற்றி கொண்டது.

'94 உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் சுற்றில் ரஷ்யாவையும், கமரூனையும் வெற்றி கொண்டு சுவீடனுடன் சமன் செய்து கொண்டது. இரண்டாவது சுற்றில் ஐ. அமெரிக்காவை ஒரு கோல் மட்டும் போட்டுத் தோற்கடித்து கால் இறுதியாட்டத்தில் சுவிட்சர்லாந்தை வென்றது. தற்போது அரை இறுதி ஆட்டத்தில் மீண்டும் சுவீடனைச் சந்தித்து 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிகண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. றொமாறியோ, பெபிடோ,டுங்கா போன்றோர் பிரேசிலின் குறிப்பிடத்தக்க வீரர்களாவர். இவ்விறுதிப் போட்டியில் எந்த நாடு வெற்றி பெற்றாலும் அது கிண்ணத்தைப் பெறும் நான்காவது முறையாக இருக்கும்.

### இத்தாலி

இதுவரை 4 உலகக் கிண்ண இறுதிப்போட்டிகளில் நிறைவட்டத்திற்கு வந்துள்ளது. 70 ல் பிரேசிலிடம் தோல்விகண்ட இத்தாலி 34ல் செக்கோஸ்லாவாக்கியாவையும் 38ல் ஹங்கேரியையும், 82ல் மே-ஜேர்மனியையும் வென்று மூன்றுமுறை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இம்முறை தனது 1-ம் ஆட்டத்திலேயே அயர்லாந்திடம் தோல்வி கண்டு பின் வந்த இரண்டு ஆட்டங்களை மெக்சிகோவுடன் சமமும், நோர்வேயுடன் வெற்றியும் பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது சுற்றில் நைஜீரியாவைத் தோற்கடித்து கால் இறுதியாட்டத்தில் ஸ்பானியாவை வெற்றிகொண்டு தற்போது அரைஇறுதியாட்டத்தில் பல்கேரியாவையும் வென்று இறுதியாட்டத்திற்கு வந்துள்ளது. இத்தாலிய அணியில்றொபேட்டோபாகியோ, டினோ பகியோ,அல்பேடினி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களுள் ஒருசிலர்:

## உதைபந்தாட்ட உலகின் இன்றைய நாயகன் பகியோ

உலகக்கிண்ணம் 94 போட்டிகள் இறுதிக் கட்டத்தையடைந்துள்ள வேளையில் உதைபந்தாட்ட ரசிகர்களால் பெரிதும் பேசப்படும் வீரர்களுள் முதன்மையானவராகத் திகழ்பவர் இத்தாலிய உதைபந்தாட்ட வீரன் றொபேட்டோ பாகியோ ஆவார். இத்தாலியை உலகக்கிண்ண இறுதிப்போட்டிக்குக் கொண்டுவந்தவர் இவர் என்றால் அதில் மிகையில்லை.


இரண்டாம் சுற்றில் 1-0- என்றவாறு நைஜீரியா முன்னணியில் இருந்தவேளை 89 வது நிமிடத்தில் இவர் போட்ட கோல் சமநிலையை ஏற்படுத்தி, மேலதிக நேரத்தில் இவர் போட்ட கோல் அடுத்தகட்டத்திற்கு இத்தாலியை நகர்த்தியது. இதன்பின் கால் இறுதியாட்டத்திலும் இதே போன்று இத்தாலியை றொபேட்டோபாகியோ அடுத்தகட்டத்திற்கு நகர்த்தினார். ஸ்பானியாவின் கையோங்கியிருந்த கால் இறுதியாட்டத்தில் 1 - 1 என்ற நிலை தொடர்ந்து இத்தாலிக்கு சங்கடம் உருவாகுமோ என்றெண்ணிய வேளை 88ம் நிமிடத்தில் இவர் ஒரு கோல் போட்டு அரை இறுதி ஆட்டத்திற்கு இத்தாலியை பிரவேசிக்க வழி செய்தார்.

அரையிறுதி ஆட்டத்தில் பல்கேரியாவுக்கு எதிராக குறுகிய நேரத்தில் இரண்டு கோல்களைப் போட்டு தற்போது இறுதியாட்டத்திற்கு இத்தாலியை நகர்த்தியுள்ளார்.

27 வயதான பாகியோ 93ம் ஆண்டின் சிறந்த உலக உதைபந்தாட்ட வீரனாக FIFA வால் தெரிவு செய்யப்பட்டவர். அதோடு இவ்வருடத்தின் ஐரோப்பிய சிறந்த வீரருக்கானவிருதையும் பெற்றுக்கொண்டவர். றொபேட்டோபாகியோ இத்தாலிய அணியின் வரப்பிரசாதம். நுட்பங்கள் நிறைந்தவர் இவர் தேவைக்கேற்ற எந்த நிலையிலும் விளையாடக்கூடியவர். ஆனால் பந்து எதிர் பகுதியை அணுகும்போது கோல் போடத் தயாராகி விடுவார். பாகியோசரிந்து, சாய்ந்து செல்லும் வகையில் FREE KICKS அடிப்பதில் வல்லவர்.

இம்முறை அரையிறுதி வரை தானே முதல்வன் என்று நிரூபித்துள்ளார் எதிரணியில் றொமாரியோ, பெபிடோ போன்றோர் இருக்கிறார்கள். உச்சத்திறமைகள் சந்திக்கப் போகின்றன ஆனால் பாகியோ விட்டுக்கொடுக்கப் போகிறவர் அல்ல இவர் கோல் போடுபவர் மட்டுமல்ல, பந்தைக் கொடுப்பவரும் கூட (PROVIDER) உதைபந்தாட்ட ரசிகர்கள் தற்போது வியந்து பாராட்டிக் கொண்டிருக்க, பிரேசில் அணி இவருடைய திறமை தமக்கு ஆபத்தாக முடிந்துவிடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

# ரசிகர்களின் பார்வையில் 'டொனால்ட்'



## டொனால்ட் வெற்றிக்கிண்ணம்

'93 இறுதிப் போட்டி

# ரசிகர்களின் பார்வையில் டொனால்ட் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டி

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ண இறுதியாட்டம் நடைபெறப் போகும் இவ்வேளையில் கிரிக்கெட் ரசிகர்கள் சிலரைச் சந்தித்து சென்றலைட்ஸ், பல்கலைக் கழக இறுதியாட்டம் பற்றி கருத்துக் கேட்டோம். அவர்கள் கூறுகிறார்கள்;-

**திரு எஸ். கந்தசாமி (60வ)**
ஓய்வு பெற்ற மாவட்ட நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் யாழ்ப்பாணம்.

சென்றலைட்ஸ் அணியினர் அனுபவம் வாய்ந்தவர்கள். எப்பொழுதும் வெற்றியை விட்டுக் கொடாமல் ஆடும் இயல்பு கொண்டவர்கள். திறமையான பந்துக் காப்பாளர்கள். பந்து வீச்சிலும் எல்லோரும் வலலவர்கள். இங்கு இவர்களின் இத்திறமைகளுக்குப் பின்னால் மூத்த உறுப்பினர் ஒருவரின் வழிகாட்டல் இருக்கிறது. ஆனால் அவர் இவ்விறுதியாட்டத்தில் சென்றலைட்சுக்காக ஆடாவிட்டால் சென்றலைட்ஸ் அணியின் பலம் குறையும் என்பதே என் கருத்து. ஆனால் சாந்திகரன் ரஜீவன் அந்த இடத்தை நிரப்புவர் என எதிர்பார்க்கலாம். அவர்களும் அனுபவம் நிறையக் கொண்ட வீரர்கள்

பல்கலைக்கழக அணியைப் பொறுத்தவரை அது ஒரு தெரிவுக் குழு என்றே கூறலாம். பல திசை வீரர்கள் தத்தம் தனித்துவத்தோடு பல்கலைக்கழகத்தில் ஒன்றிணைந்திருக்கிறார்கள் ஆனால் இவர்களின் இந்த பலம்தா இவர்களின் பலவீனமாகவும் இருக்கின்றது. இவர்கள் முழுமை பெற்றஒரு அணியாக எப்போதும் இயங்குவதாகத் தெரியவில்லை அப்படியான முழுமையான செயற்பாட்டைக் காட்டின் இவர்களை வெல்வது கடினம் விவேகானந்தன் விவேகமான ஒரு அணித் தலைவர்தான் ஆனால் இவ்வாட்டத்தில் எப்படி இயங்கப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் விவேசுதேசன், சிவசுதன் துடுப்பாட்டத் துறையில் நன்கு செய்யக் கூடியவர்கள். பந்து வீச்சும் மிகப் பலம் வாய்ந்தது.

இதேபோன்று சென்றலைட்ஸ் அணியில் பிரபா, ரஜீவன், சாந்திகரன் போன்ற திறமையான பந்துவீச்சாளர்கள் இருக்கிறார்கள். மேலும் மத்திய வரிசையில் ரகுதாஸ் நம்பகமான ஆட்டக்காரராக இருக்கின்றார். இறுதிவரை சென்றலைட்ஸ் போராடுவார்கள்' மொத்தத்தில் அன்றைய தினம் இரண்டு அணிகளும் செயற்படும் விதமே முடிவை நிர்ணயிக்கும்.

**திரு எஸ். சண்முகம்**
சண்முகம் தோநீர்ச்சாலை,
10, சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

சென்றலைட்ஸ் பலமான அணி அதற்காக பல்கலைக் கழக அணியைக் குறைத்து மதிப்பிட முடியாது. சுதேசன், விவேகானந்தன், திலக், ராஜூ, பத்மநாதன் போன்றவர்கள் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் சென்றலைட்சுக்கு ஒரு சாதகம் மைதானம் அவர்களின் மைதானம் என்பது தான். ஆனால் இவர்களுக்குப் பாதகம் சண் அண்ணர் இல்லாதது தான். இதே வேளை சண் அண்ணர் பயிற்றுனராக இருப்பதும் அவர்களுக்குச் சாதகம். ஆனால் சாந்தி, ரஜீவன் சென்றலைட்சை வழிநடாத்திச் செல்வர் என்று எதிர்பார்க்கலாம்.

மேலும் பல்கலைக்கழக அணிக்கு இல்லாத ஒரு வாய்ப்பு சென்றலைட்சுக்கு உண்டு. அதுதான் சுழல் பந்துவீச்சு- இம்முறை பந்துவீச்சில் ரஜீவன் நன்றாகவே செய்துள்ளார் சாந்தியும் நல்லதொரு சுழல் பந்துவீச்சாளர் மத்திய வரிசையில் ரகுதாஸ் நன்றாகச் செய்கின்றார் சண் அண்ணர் இல்லாமல் சாந்தி ரஜீவன்ஆகியோர் பல்கலைக்கழகத்தைத் தோற்கடிக்கவில்லையா?

இதேவேளை பல்கலைக்கழகம் திறமைகளின் ஒரு ஒருங்கிணைப்பு அற்புதமான வீரர்களைக் கொண்டது திலக் விவே பத்மநாதன், சுதேசன் சிறி, நரேஸ் என்று அடுக்கிக்கொண்டே போகலாம் ஆனால் இவர்கள் கூட்டுப்பொறுப்போடு இணைந்து செயற்பட வேண்டும். இப்படியான நிலையில் பலகலைக்கழகத்தை தோற்கடிப்பது இலகுவல்ல ஏதோ இவர்கள் இணையாமல், சேர்ந்து நின்று விளையாடுவது போலவே மனதிற்குப்படுகின்றது இப்போக்கு மாற்றப்பட வேண்டும்.


முதலில் துடுப்பெடுத்தாடும் அணிவெல்லும் என்பது என் எண்ணம். 225 அளவில் அடித்து விட்டால் தொடரும் அணி அவ்வெண்ணிக்கையை எட்ட மிகவும் கஷ்டப்படும் என்பது திண்ணம் ஏனெனில் இரண்டு அணிகளும் நல்ல பந்து வீச்சாளர்களைக் கொண்ட அணிகள்.

எதற்கும் இருபலம் வாய்ந்த அணிகள் மோதும்போது ரசிகர்களின் ஆனந்தத்திற்கு குறைவில்லை.

**கலாநிதி. எஸ். மோகனதாஸ்**
விவசாயப்பீடம், யாழ். பல்கலைக்கழகம் கிளிநொச்சி.

உண்மையில் இங்கு சண்முகலிங்கம் குறிப்பிடப்பட வேண்டியவராகின்றார் இவர் இல்லாமல் போவது சென்றலைட்சுக்கு இழப்பென்றால் மறுபுறம் பல்கலைக்கழக அணிக்கு பெரும் வாய்ப்பு சில வேளைகளில் இந்த இடைவெளியிற்றான் வெற்றி வாய்ப்பு ஊசலாடக்கூடும் மேலும் கிரிக்கெட் என்பது சந்தர்ப்பங்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு விளையாட்டாகும் தவறவிடப்படும் ஒருபிடி இருபக்க முடிவுகளையும் மாற்றிவிடக் கூடும்.

இரண்டும் நல்ல துடுப்பாட்ட அணிகள். இது 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் இங்கு முழு நேரமும் பொறுமையாக இருந்து துடுப்பெடுத்தாடவேண்டும். நிலைமைகளைக்கையாள்வதில் உள்ளதிறனே இப்போட்டியின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் என்பது என் கருத்து.



இங்கு அணித்தலைவர்,பயிற்றுநர் இருவரின் பணி மிகவும் முக்கியமானது. அவர்களே அணியின் பணிகளுக்கு வழிகாட்டவேண்டும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டத்துக்கு இரண்டு அணிகளும் தகுதியானவை.

சென்றலைட்சில் அருணோதயம், ரகுதாஸ் நல்ல எண்ணிக்கைகளைப் பெறக்கூடும். ஆனால் எல்லா வீரர்களும் இது 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்

பல்கலைக்கழக அணியைப் பொறுத்தவரை அவர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## டொனால்ட்வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டி இன்று

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50பந்துப்பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் இறுதியாட்டம் 94இன்று நடைபெறவுள்ளது. யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் இவ்விறுதியாட்டம் இச்சுற்றுப் போட்டியின் ஐந்தாவது வெற்றிக் கிண்ண ஆட்டமாகும்.

1990 ல் இச்சுற்றுப் போட்டி ஆரம்பமாகியது. ஆனால்தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் ஒரு சில ஆட்டங்களுடன் இவ்வருடம் சுற்றுப் போட்டி இடை நிறுத்தப்பட்டது. பின்னர் 91 முதல் வருடாவருடம் இடையூறின்றி இச்சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது. 91 ல் மானிப்பாய் பரீஷ் அணியும் 92, 93 களில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டன.

## '93 இறுதிப் போட்டி ஓர் மீள் பார்வை

கடந்த ஆண்டும் இவ்விறுதியாட்டத்தில்யாழ்பல்கலைக் கழக அணியும், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் கலந்துகொண்டன. பல்கலைக்கழக அணிக்கு அன்ரன் ராஜகாரியரும், சென்றலைட்ஸ் அணிக்கு சண்முகலிங்கமும் தலைமை தாங்கினர்.

இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் பல்கலைக்கழக அணி 47 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்கு இழப்பிற்கு 185 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. விவேகானந்தன் சேகரித்த 93 ஓட்டங்களையும், நரேஸ் பெற்ற 23 ஓட்டங்களையும் தவிர துடுப்பாட்டத்தில் குறிப்பிடத்தக்கதாக எதுவும் இல்லை. 7-வது இலக்கு 113 இல் சரிய 8 - வது இலக்கு வரை இவர்கள் சோடி சேர்ந்து சேகரித்த 71 ஓட்டங்கள் மிகப் பெறுமதி மிக்கவை 3 ஆவது இலக்கு வீழ்ந்த பின் விவேகானந்தன் தன் ஆட்டத் திறமையால் எண்ணிக்கையை வளர்த்துச் சென்றுள்ளமை பல்கலைக்கழக அணியைச் சிறிது நிமிர்த்தியது எனலாம். பந்து வீச்சில் பிரபாகரனும், பேணாட், ரமேசும் தலா இரு இலக்குகளையும் சண்முகலிங்கம் அருணோதயம் தலா ஒரு இலக்குகளையும் பெற்றுக் கொண்டனர். எந்தஒரு சென்றலைட்ஸ் பந்து வீச்சாளரையும் பல்கலைக்கழக அணி நொருங்க அடித்ததாகத் தெரியவில்லை.

சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற 186 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்தது. முதலாவது இலக்கை 5 ஓட்டங்கள் இருக்கையில் இவர்கள் இழந்துவிட்டாலும் கூட பின்னர் வெற்றி இலக்கை அடையும் வரை பலமான நிலையிலேயே ஆடினார்கள். 48,75,136 என்ற நிலையிலேயே இவர்களின் அடுத்தடுத்த இலக்குகள் வீழ்ந்துள்ளன இங்கு ஒருவர் தவிர மற்றெல்லோரும் சராசரி ஓட்டங்களைப் பெற்றுள்ளார்கள். சண்முகலிங்கம் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார் சண்முகலிங்கம், விவேகானந்தன் இருவரும் தம் எண்ணிக்கையின் பெருமளவு ஓட்டங்களை ஒன்றுகள். இரண்டுகள் என்றவாறு சேகரித்திருப்பது அவர்களின் முதிர்ச்சியையும் பொறுப்புணர்ச்சியையும் காட்டி நிற்கிறது. பந்து வீச்சில் சுதேசன் 2 இலக்குகளையும் விவேகானந்தன், சிறிதரன் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றியிருந்தார்கள். இருந்தும் சென்றலைட்ஸ் அணியினர் 40 பந்துப் பரிமாற்றங்களில் 186 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமை அவதானிக்கத் தக்கது. பந்து வீச்சாளர்கள் ஓரளவு இறுக்கமாகவே தம் பணியைச் செய்திருந்தாலும் கூட 13-ம் பந்து பரிமாற்றத்தில் 21 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்று குறைந்தது. 3 பந்துப் பரிமாற்றங்களையாவது சென்றலைட்ஸ் அணியினர் குறைத்துக் கொண்டார்கள் இறுதியில் சென்றலைட்ஸ் அணியினர் 4/186என்றவாறு ஆட்டத்தை தமக்கு வெற்றியாக்கி 93இன் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்தைப் பெருமையுடன் தமதாக்கிக் கொண்டார்கள்.

இம்முறையும் இவ்விரு அணியினரும் இறுதியாட்டத்தில் மோதப் போகிறார்கள், இரு சாராரும் பலம் வாய்ந்தவர்கள். இறுதி முடிவு பற்றி ஆட்டம் முடியும் வரை எப்படிக்

# உதைபந்தாட்ட உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய போட்டிகள்

## கால்இறுதி ஆட்டங்கள் பற்றி ஒரு நோக்கு

### பல்கேரியா -ஜேர்மனி

இக் கால் இறுதியாட்டம் பல்கேரியாவுக்கும் ஜேர்மனிக்கும் இடையில் நடைபெற்றது. உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளில் 32 வருடங்களில் 4வது முறையாகக் கலந்து கொண்ட பல்கேரியாவின் விருப்பம் ஒரு ஆட்டத்திலாவது வெற்றி பெற வேண்டும் என்பதாக இருந்திருக்கக் கூடும். ஏனெனில் 86 ம் ஆண்டு வரை இவர்களின் அனுபவம் 6 சமன்களும் 10 தோல்விகளுமாகும் 94 உலகக்கிண்ணப்போட்டிகளில் முதலாவது ஆட்டத்தில் நைஜீரியாவிடம் இவர்கள் 3-0 என்றவாறுதோற்ற போது பல்கேரியாவின் பக்கம் யாரும் பெரிதாககவனம் செலுத்தியிருக்க முடியாது எனினும் முதல் சுற்றில் கிரீஸ், ஆர்ஜென்ரீனா இரண்டையும் தோற்கடித்து 2ம் சுற்றில் மெக்சிக்கோவையும் தோற்கடித்த போது பல்கேரியா மீது ரசிகர்களின் கவனம் திரும்பியிருக்கலாம். அடுத்து கால் இறுதிப் போட்டியில் ஜேர்மனியைச் சந்திக்கும் போது இதற்கப்பால் பல்கேரியா செல்ல முடியுமா என்ற வினாவும் இயல்பாகவே எழுந்திருக்கும். இதற்கு விடை 3ம் கால் இறுதிப் போட்டியில் உதைபந்தாட்ட உலகிற்கு அதிர்ச்சியும் ஆனந்தமும் கலந்தே கிடைத்தது உலகச் சாம்பியன் ஜேர்மனியை 2 - 1 என்ற வகையில் பல்கேரியா தோற்கடித்த போது அரை இறுதியாட்டத்திற்கு பல்கேரியா தகுதி பெற்றது என்பதையும் கால் இறுதியாட்டத்திலேயே ஜேர்மனி வெளியேற்றப்பட்டதென்பதையும் இணைந்தே பார்க்க வேண்டும்.

ஆட்டம் ஆரம்பித்த வேளை முதல் இரு அணிகளும் தம் திறமையை நன்றாகவே வெளிப்படுத்தின. இருந்தும் 10 வது நிமிடத்தில் அடுத்தடுத்து இரண்டு நிச்சயமான சந்தர்ப்பங்களை பல்கேரியா இழந்த போது, ஜேர்மனிக்கு ஆட்டம் சுலபமாகிராது எனபது புரிந்தது 23 நிமிடததில் ஜேர்மனியும் ஒரு அரியசந்தர்ப்பத்தைஇழந்ததைக் குறிப்பிடவேண்டும் இரண்டு அணிகளும் சம பலமாக இருக்கும் போது கோல் பெறுதல் சாத்தியமானதில்லை இங்கும் இடைவேளை வரை இந்நிலையே நீடித்தது இடைவேளை கழிந்து இரண்டொரு நிமிடங்களில் இந்நிலை தளர்ந்தது ஜேர்மனிக்கு ஒரு பெனால்டி உதை கிடைத்தது, இந்தச் சந்தர்ப்பம் சரியானது தானா என்பது ரசிகர்கள் மத்தியில் ஒரு வினாவாக எழுந்தது. இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் இச்சந்தர்ப்பத்துடன் சம்பந்தப்பட்ட பல்கேரிய வீரர் தன் விரக்தியை மிக நாகரிகமாக வெளிப்படுத்தியதுதான். எனினும் லோதர் மத்தாயஸ் பக்குவமாக அதனை கோலாக்கினார். இதன் பின்னர் பல்கேரிய வின் ஆட்டம் அற்புதமாக அமைந்தது. 76-ம் நிமிடத்தில் ஸ்டொயிஸ்கோவ் பல்கேரியாவுக்கு ஒரு அற்புதமான கோல் பெற்ற போது பல்கேரிய ரசிகாகள் ஆனந்த அதிர்ச்சியடைந்திருப்பார்கள் இதைவிட இன்னமும் ஒருபடி மேலாக 79-ம் நிமிடத்தில் HEADER மூலம் லெட்ச்கோவ் கோல் பெற்றதும் ஜேர்மனிய ரசிகர்கள் அதிர்ந்து போயிருப்பார்கள். இப்போது நிலை 2-1 என்ற வகையில் பல்கேரியா முன்னணியில் நின்றது ஆட்டத்தின் இறுதிவேளையில் ஜேர்மனி எவ்வளவு முயன்றும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை.

### பிரேசில் - நெதர்லாந்து

இரண்டாவது கால் இறுதி ஆட்டம் பிரேசிலுக்கும், நெதர்லாந்துக்கும் இடையில் இடம்பெற்றது இந்த ஆட்டம் ஆரம்பத்தில் சிறிது மந்தகதியாகவே சென்று கொண்டிருந்தது. இரு அணிகளும் தம் பரப்பினுள் வைத்து தம்மை ஒழுங்கு படுத்துப பின் முன்னேறி கோல் போட முனைந்தமை போலத்தெரிந்தது இது அவர்கள் பாணியாக இருக்க வேண்டும். அல்லது பரஸ்பரம் எதிர் அணியின் திறமைக்குக் கொடுத்த மதிப்பாக இருக்க வேண்டும். ஆட்டம் தொடங்கி 25 நிமிடங்களின் பின்னர் வந்த 10 நிமிடங்களில் பிரேசில் ஒரு சந்தர்ப்பம். நெதர்லாந்து இரண்டு சந்தர்ப்பங்கள் என்றவாறு தம் முயற்சியின் பலனைப் பெற இயலாதவாறு ஏமாந்து நின்றனர். பொதுவாக முதல் அரைப்பகுதி நேரத்தில் பிரேசில் ஆதிக்கம் செலுத்தி விளையாடியது என்றாலும் நெதர்லாந்து அதே வேகத்துடன் தடுத்து ஆடிக்கொண்டிருந்தது இடைவேளை வரை இரு தரப்பாரும் கோல் ஏதும் போட இயலவில்லை. இடைவேளையின் பின் 7 -வது நிமிடத்தில் இடது கரையாக வந்த பெபிடோ பந்தை உதைந்து கோல் பகுதிக்கு அனுப்ப றொமாரியோ அதனை சிறந்த முறையில் கோல் ஆக்கினர். இதன் பின் பெபிடோ அடித்த பந்தொன்று நில மட்டத்தில் கோல் கம்பத்தினைத் தடவிக் கொண்டு வெளியே சென்றது ரசிகர்களை உணர்ச்சிக்குள்ளாக்கியது ஆனாலும் இடைவேளையின் பின் 18 ம் நிமிடம் பெபிடோ ஒரு கோலை லாவகமாக உள்ளே தள்ளி 2 - 0 என்றவாறு பிரேசிலை ஸ்திரப்படுத்தினார் ஸ்திர நிலையின் மகிழ்ச்சி தீருமுன்பே இரண்டொரு நிமிடங்களில் நெதர்லாந்து வீரன் பேர்காம்ப் அற்புதமாக ஒரு கோலை உள்ளே தள்ளினார். இதனைத் தொடர்ந்து ஆட்டம் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியது. இவ் வேளையில் இடை வேளையின் பின் 31 வது நிமிடம் நெதர்லாந்து இன்னொரு கோலை உள்ளே தள்ளி போட்டியைச் சரிசமனாக்கியது ஆனால், 36 வது நிமிடத்தில் பிரேசில் பெற்ற FREE KICK ஒன்றை பிராங்கோ நேராக உள்ளே நுழைத்து கோலாக்கினார். இந் நிலையில் 3 - 2 என்றவாறு பிரேசில் முன்னணியில் நின்றது. இதன் பின் நெதர்லாந்து எவ்வளவு முனைந்தும் நிலைமையை மாற்ற முடியவில்லை. இறுதியில் பிரேசில் 3 - 2 என்ற கணக்கில் வெற்றியைத் தமதாக்கிக் கொண்டது.

### ருமேனியா - சுவீடன்

அடுத்த கால் இறுதியாட்டம் ருமேனியாவிற்கும் சுவீடனுக்கும் இடையில் இடம் பெற்றது. ருமேனியா ஆர்ஜென்டீனாவைத் தோற்கடித்தும், சுவீடன் சவூதிஅரேபியாவைத் தோற்கடித்தும் கால் இறுதியாட்டக்குக்குத் தகுதி பெற்றன ஆட்டம் ஆரம்பித்து 15 நிமிடங்கள் வரை சுவீடன் அபாரமான வேகத்துடன் ருமேனிய அணிக்கு அழுத்தம் கொடுத்து ஆடலாயிற்று இதன் பின் ஆட்டத்தின் இறுதி வரை முடிவு எவ்வாறு அமைந்தபோதும்- ருமேனியா வெகு சிறப்பாக விளையாடியது. இடைவேளையை அண்டிக் கொண்டிருந்த வேளை ருமேனியா ஓரிரண்டு சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது துரதிஸ்டமாகும் அதேவேளை ருமேனியா கோல் காப்பு வீரர் திறமையாக ஒரு கோலையும் காப்பாற்றினார். இடைவேளை வரை ருமேனியாவின் கை மேலோங்கிக் காணப்பட்டாலும் நிலை 0-0 என்றவாறு அமைந்திருந்தது.

இடைவேளையின் பின்னர் 34 ம் நிமிடத்தில் புரோலின் வெகுநேர்த்தியாச சுவீடனுக்கு நேருதை FREE KICK மூலம் ஒரு கோல் பெற்றுக் கொடுத்தார். தொடந்து ஆட்டம் முடிய சில நிமிடங்கள் இருக்கையில் ருமேனியா ஒரு நேருதை FREE kICk மூலம் கோல் பெற்று ஆட்டத்தைச் சமமாக்கியது. இதனைத் தொடர்ந்து மேலதிக நேரம் வழங்கப்பட்டது. மேலதிக நேரத்தின் 10 வது நிமிடத்தில் ருமேனியா கோல் ஒன்றைப் போட்டு 2-1 என முன்னணியில் நின்றது தொடர்ந்து மேலதிக நேரத்தின் இறுதி அரைப்பகுதியில் சுவீடன் இன்னொரு கோல் போட்டு நிலையை 2-2 ஆக்கியது. இதன் பின் பெனால்ட்டி உதை மூலம் தீர்மானம் எடுக்கவேண்டியதாயிற்று சுவீடன் முதலாவது உதையைத் தவறவிட்டு மிகுதி நான்கையும் கோலாக்கியது. ருமேனியா நான்காவது உதையைத் தவறவிட்டு மற்ற நான்கையும் கோலாக்கியது. மீண்டும் சமநிலை ஏற்பட இறுதியாக தலா ஒரு பெனால்டி உதை வழங்கப்பட்டது. முதலில் எதிர் கொண்ட ருமேனியா கோல் காப்பு வீரரால் கோலைத் தடுக்க முடியவில்லை. ஆனால் சுவீடன் கோல் காப்பு வீரர் ராவெல்லி கோலைத் தடுத்து வெற்றியை உறுதிப்படுத்தினார் சுவீடன் மொத்தத்தில் 7-6 என்ற வகையில் வெற்றியைத் தழுவிக் கொண்டாலும் கூட ருமேனியாவின் அபாரமான விளையாட்டே ரசிகர்களின் நெஞ்சில் நிறைந்திருந்தது.

### இத்தாலி - ஸ்பெய்ன்

இக் கால் இறுதியாட்டத்தில் கலந்து கொண்ட அணிகள் இத்தாலி-ஸ்பெய்ன் இத்தாலி இவ்வாட்டத்தில் 2-1 என வெற்றிபெற்றது இருதரப்பாரும் மெதுவாகவே ஆரம்பித்து வேகத்தைக் கூட்டிச் சென்ற ஆட்டம் இது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் சிறிது அழுத்தம் கொடுத்து ஆடிக் கொண்டிருந்தவர்கள் ஸ்பானியர் இருந்தும் 26-வது நிமிடத்தில் 30யார் தூரத்தில் வைத்து டினோ பாகியோ அபாரமான உதையொன்றின் மூலம் இத்தாலிக்கு முதலாவது கோல் பெற்றுக் கொடுத்தார் ஏறத்தாள 10 நிமிடங்களின் பின்னர் ஸ்பானியா ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் (Header) தவறவிட்டது இடைவேளை வரை கோல் கணக்கில் மாற்றம் ஏற்படவில்லை ஆனால் இடைவேளையின் பின் 59-ம் நிமிடம் கமினேரோ ஒரு கோலைப்போட்டு கோல் கணக்கைச் சமனாக்கினார் இதன் பின் ஆட்டம் ஸ்பானியா பக்கமாகவே இருந்தது மிகவேகமாகவும் அதே வேளை இத்தாலி எல்லைக்குள்ளேயே நின்றும் உயர்ந்த தரமான ஆட்டமொன்றினை ஸ்பானியர் ரசிகர்களுக்குக் கொடுத்தார்கள் இவர்களின் குழு ஆட்டமுறை அபாரமாக இருந்தது. பல தடவை இத்தாலிய கோல் வாயிலை அண்மித்தும் அதனைச் சரிவர பயன் படுத்த முடியவில்லை இதற்கிடையில் இத்தாலிய றொபோட்டோ பாகியோ சந்தர்ப்பங்களைச்சாதகமாக்க முனைந்து கொண்டிருந்தார் ஆட்டம் சரிசமமாகி மேலதிக நேரத்திற்குச் செல்லுமோ என எண்ணிய வேளை றொபோட்டோ பாகியோ கோல் காப்பு வீரனையும் கூடத் தட்டிக் கடந்து அற்புதமான கோல் ஒன்றை இத்தாலிக்குப் பெற்றுக் கொடுத்தார் உண்மையில் ஸ்பானியா வென்றிருக்க வேண்டிய இவ்வாட்டத்தை மாற்றியமைத்தவர் றொபோட்டோ பாகியோ என்றால் மிகையில்லை.

---

ரசிகர்களின் நெல்லிக்காய் மூட்டைதான் எல்லோரும் தனித்தனியே சிறந்த வீரர்கள்தான் ஆனால் கிரிக்கெட்டில்தனித்துவம் வெற்றியைக் கொடுப்பதில்லை. தனித்துவத்தின் ஒருங்கிணைப்புத்தான் வெற்றியைக்கொடுக்கும். இங்கு இந்தக் கடினமானபணிபயிற்றுநரின்மீதே சார்கின்றது. பல்கலைக்கழகத்தின் வெற்றியென்பது பயிற்றுநரின் வழிகாட்டலிலும் அதில் இணைந்துகொள்ளும் அணியின் திறமைசாலிகள் பதினொருபேரிலும் தான் தங்கியுள்ளது. பல்கலைக்கழகத்தைப் பொறுத்து விவேகதேசன், நன்றாகச் செய்யக்கூடும்.

இ. தீபன் 8வயது

---

## கிராமிய சிறார்கள் வளர திணைக்களம் உதவும்

-வேலாயுதம்

கிராமச் சூழலில் வாழும் சிறார்களின் கல்வி வளம் பெற ஆசிரியர் வளம், உபகரணங்கள் என்பனவற்றை கல்வித்திணைக்களம் உபந்தளிக்கும். இவ்வாறு ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், மாணவர்களின் ஆளுமையையும் பெற்றோர்களின் பங்களிப்புகளையும் பாராட்டினார் இவ் விழாவிற்கு அதிபர் திருமதி- ச. சோமலிங்கம் தலைமை வகித்தார்.

## பொதுஜன முன்னணியின்

---

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி பாடசாலை மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. ச.சண்முகலிங்கப் தலைமையில் நடைபெற்ற மேற்படி போட்டி நிகழ்வில் சங்கானை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு அ. தற்பரானந்தன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். சங்கானை வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு ந.மதி உட்பட மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்

## கண்டெடுப்பு

தாவடிச் சந்தியில் நகையொன்றுஎழிலரசிஎன்பவரால் நேற்றுமுன்தினம்கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

## கலந்துரையாடல்

பலாலி, வயாவிளான், வளலாய், இடைக்காடு, குப்பிளான் [illegible] பகுதிகளில் வசித்து இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழும பதினெட்டு வயதுக்கு மேறபட்ட இரு பாலாருக்குமான கலந்துரையாடல்,


ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா வழங்கும்

திருவிழாக்கால, சுத்தபோசன உணவுப் பொட்டலங்கள், தயிர், மோர், அப்பளம் மற்றும் பக்த கோடிகள் விரும்பும் தித்திப்பான சுத்தபோசன உணவுப் பொட்டலங்கள், வெள்ளி, செவ்வாய். மற்றும் விரத தினங்களில் விசேஷமாக தனியாக தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. விரையுங்கள்.

ஜெசித்தாரா,

[சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.]

(சி-9918)

சன், நன்றாகச் செய்யக்கூடும்.

**இ- தீபன் 8 வயது**
**(புனித பத்திரிசிரியார் கல்லூரி)**
**128, கச்சேரி கிழக்கு.**
**யாழ்ப்பாணம்.**

(மூத்தகிரிக்கெட்வீரர்களால் செல்லமாக 'மாஸ்டர்' என்று அழைக்கபடுகிறார் இவர் சில கிரிக்கெட் ஆட்டங்களின் போது மைதானத்தில் இவரைச்சந்தித்துள்ளோம் அவ்வேளையில் ஆட்டங்கள் பற்றிய இவரின் எதிர்வு கூறல்கள் அச்சொட்டாகச் சரிவந்துள்ளன. இதனையொட்டியே இப்பகுதியில் தீபனின் கருத்தையும் தொகுத்துத் தந்துள்ளோம்.)

பல்கலைக்கழக அணிதான் வெல்லும் சென்றலைட்சை விட பல்கலைக்கழகத்தில் தான் நல்ல துடுப்பாட்டமும் நல்ல பந்து வீச்சும் காணப்படுகின்றது சென்றலைட்சின் பந்து வீச்சுக்கு நிச்சயம் பல்கலைக்கழக அண்ணைமார் அடிப்பார்கள். திலக், விவேகானந்தன் சுதேசன் போன்ற அண்ணாக்கள். நன்றாக அடிக்கக் கூடியவர்கள், அதேபோலவே திலக் அண்ணா, அண்ணா விவே நல்லபந்துவீச்சாளர்கள். சென்றலைட்சில் சுரேஸ் அண்ணா, ரகுதாஸ் அண்ணா போன்றவர்கள் நன்றாக துடுப்பெடுத்துஆடக்கூடியவர்கள். எப்படியென்றாலும்பல்கலைக் கழகஅணியினர் தான்வெற்றி பெறுவார்கள் என்று நினைக்கிறேன்.

## தீமூட்டி தற்கொலை

தனக்கு தானே தீமூட்டி எரித்ததாக கூறப்படும் இளம் பெண் ஒருவர் மோசமான எரிகாயங்களுடன் யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு சிறிது நேரத்தில் மரணமடைந்தார்.

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். செல்வராணி (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது, (சி)

## பொதுஜன முன்னணியின் தேர்தல்பிரகடன வெளியீடு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபானத்தைவெளியிட்டுள்ளது தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிககப்படும், வேலை வாய்ப்பு வழங்குவது அதிகரிக்கப்படும், தாராளமயமாக்கல் பொருளாதாரம் என்பவை அத்தேர்தல் விஞ்ஞாபானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிரிவினைவாத தமிழ் போராளிகளின் பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காண்போம் என இத்தேர்தல் விஞ்ஞாபானத்தை தயாரித்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

திரு ந.மதி உட்பட மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து நிகழ்வை சிறப்பித்தனர்.

மேலும் மிக உற்சாகமாக நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான போட்டிகளில் 256 புள்ளிகளைப்பெற்று பச்சை இல்லம் 1ஆம் இடத்தையும். 248 புள்ளிகளைப் பெற்று நீல இல்லம் 2ஆம் இடத்தையும் 237 புள்ளிகளைப் பெற்று சிவப்பு இல்லம் 3ஆம் இடத்தையும் முறையே பெற்றுக் கொண்டன. (41)

மேற்பட்ட இரு பாலாருக்குமான கலந்துரையாடல், இன்று மாலை நான்கு மணியளவில் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோப்பாய் வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இக்கலந்துரையாடலில் பல முக்கிய விடயங்கள் பேசப்படவுள்ளன. அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். ராஜ்குமார்**
**ஆசீர்வாதம் (ஜெகா)**

| தாயின்மடியில் | தாயகமீட்பில் |
|---|---|
| 1962-9-3 | 1986-7-17 |

அன்பின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
விடுதலையில் வேட்கை கொண்டு
வீறுகொண்டெழுந்த என் முத்தே
தியாக வேள்வியில் ஆகுதியாய் ஆனவனே
உன் நீண்ட காலக்கனவுகள் ஒரு நாள்
நினைவாய் ஜனனிக்கும்

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்

மணல்குடியிருப்பு,
முல்லைத்தீவு, (8806)

## 1-ம் வருட நினைவு நாள்



மண்ணிற்காய்:
11 - 1 - 1965

மாவீரனாய்:
18 - 7 - 1993

**கப்டன் நக்கீரன்/மாமா**
**(இராசையா யோகராசா)**
பிள்ளையார் கோவிலடி, மயிலிட்டி.

பாலூட்டிய தாயார் தவிக்கின்றார் - அவர்
படும்பாடு கண்டு தந்தை துடிக்கின்றார்
சுற்றத்தார் மனதுக்குள் வெடிக்கின்றார் - நீ
ஆனாலும் மாவீரன் ஆகின்றாய்,

18-7-94 திங்கள் (நாளை) நடைபெறும் எமது மகனின் நினைவு நிகழ்விலும் மதியபோசனத்திலும் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய எல்லோரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


**இராசையா இராக்கினி அம்மா**

நாகர் கோவில் வடக்கு,
நாகர் கோவில்.

**குடும்பம்.**

(8808)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர்விநாயகமூர்த்தி கருணாநிதி**
**(இறங்குதுறை ஊழியர்)**
வீரமாணிக்கம்தேவந்துறை, மயிலிட்டித்துறை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30. 05. 1943 | 18. 06. 1994 |

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து நட்புரிமையுடன் பெரும் உதவிகள் செய்து சிறப்பித்த பருத்தித்துறை இறங்குதுறைப் பொறுப்பாளர்- ஊழியர்கள்- கச்சேரி ஊழியர்கள், உடுப்பிட்டி ப நோ. கூ. சங்க ஊழியர்கள், போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் **அமரர் கருணாநிதியின்** சார்பில் எமதுள்ளம் நிறைந்து நன்றியை அறியத் தருவதுடன் அன்னாரின் இல்லத்தில் நாளை (18-07-1994) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:-
**குடும்பத்தினர்.**

பிரதான வீதி,
பருத்தித்துறை.

(8807)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

...த்தின் அடிப்படையில் தவறான எதுவும், அரசியல் அடிப்படையில் சரியாக இருக்க முடியாது.

- டேனியல் ஓ கார்னல்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 17-07-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05


## இருந்தாலென்ன இல்லாதுவிட்டால் என்ன

கடந்த ஐந்து வருட காலமாக அமுலில் இருந்து வந்த அவசர காலச் சட்டம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவுடன் காலாவதியாகியுள்ளது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்தும், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது விசேட அதிகாரத்தைக் கொண்டு அவ்சர காலச் சட்டத்தை நீடிக்க விரும்பாததை அடுத்தும் அவசர காலச் சட்டம் காலாவதியாக விடப்பட்டுள்ளது.

ஆனால், அவசர காலச் சட்டம் காலாவதியாயினும் அதன் கீழ் கொண்டுவரப்பட்ட வடபகுதி மீதான பொருளாதாரத் தடை, வடக்கு - கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கை போன்ற எவையும் பாதிப்படையப் போவதில்லை. ஏனெனில், அவசர காலச் சட்டம் முடிவிற்கு வந்தாலும், தொடர்ந்தும் முன்னர் போலவே செயற்படுமாறு அரசாங்கம் தனது உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதே காரணமாகும்.

அரசாங்கத்தின் இவ் உத்தரவானது, தமிழ்மக்களின் உரிமைகளை மட்டும் புறக்கணிப்பதாக இல்லை. சிறிலங்கா அரசின் சட்டங்களையே அது கேலி செய்வது போன்றதாகும். வாய் மொழி உத்தரவுகள் மூலம் கட்டளைகளை அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு விதிக்க முடியுமானால், சட்டங்களும் அவற்றை இயற்றும் பாராளுமன்றங்களும் ஏன் என்பதே கேள்வியாகும்.

வாய்மொழிமூலம்சட்டங்கள்அமுல்படுத்தப்படுமானால் கடந்த காலத்தில் மாதம் ஒருமுறை பாராளுமன்றம் கூட்டப்பட்டதும், அதில் அவசர காலச் சட்டப் பிரேரணை கொண்டு வரப்பட்டு, விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுமேன்? இன்று போலவே வாய்மொழி உத்தரவு மூலம் பணிப்புக்களை விடுத்திருந்தால் நேரமும், பெரும் நிதியும் மிஞ்சுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும்.

# கலைஞர் மீதான தாக்குதல் கண்டித்து சனத் ராஜினாமா

(கொழும்பு)

பிரபல நடிகரும் ஐக்கிய தேசிய கட்சியின் மாகாண சபை உறுப்பினருமான சனத் குணத்திலக்கநேற்றுமுன்தினம் தனதுகட்சி உறுப்பினர் பதவியைஇராஜினாமா செய்துள்ளார்.

சென்ற செவ்வாய்க்கிழமை கொள்ளுப்பிட்டியில் படைப்பாளிகள் கூட்டத்தில் நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் மௌனம் சாதித்து வருவதாகவும் கலை இலக்கியபடைப்பாளிகளினால் கைதுசெய்துபொலிசாரிடம்ஒப்படைக்கப்பட்டவர்கள் தொடர்பாக பொலிஸார் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றும் இதனை ஆட்சேபித்து தனது பதவியை இராஜினாமா செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவர் இம்முறை பாராளுமன்ற தேர்தலின்போது பொதுஜனஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயல்பட இருப்பதாகவும் சுதந்திரக்கட்சியின் பொதுச் சபை செயலாளர் மொன்டேகு சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

## கடற்படைக் கப்பலுடன் மீன்பிடி படகுகள் மோதல்

### காலிப் பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

சடந்த செவ்வாய் இரவு காலி துறைமுகத்தில் கடற்படை கப்பல் ஒன்று 5 மீன்பிடி வள்ளங்களுடன் மோதிக்கொண்ட போது அவ்வள்ளங்கள் அனைத்தும் மூழ்கின இதில் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

கடற்படைக்கப்பல் ஒன்று கொழும்பிலிருந்து திருமலை சென்று கொண்டிருந்த போது காலி துறைமுகம் அருகே இந்த விபத்து நடைபெற்றது.

## கலந்துரையாடல்

பருத்தித்துறை கோட்டத்திற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சன சமூக நிலையங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்று காலை பத்து மணியளவில் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் அழைப்பு விடுத்துள்ளனர்

## இலங்கை இளம் பெண் சென்னையில் கடத்தல்

(சென்னை)

இலங்கை அகதியான 15 வயது யுவதி ஒருவரை இனந்தெரியாத நபர்கள் கடந்த வெள்ளியன்று கடத்திச் சென்றுள்ளனர். இச்சம்பவம் சென்னையில் உள்ள விசேட அகதிமுகாம் ஒன்றில் நடைபெற்றது.

இந்த யுவதி தனது சகோதரிகளுடன் கோயில் சென்று விட்டு திரும்பிய போது கடத்தப்பட்டுள்ளார் என சென்னையில் பொலிசார் தெரிவித்தனர்.

## கண்டெடுப்பு

கல்வியங்காடு சந்தைக்கு அண்மையில், அல்வாயைச் சேர்ந்த இ. அருமைத்துரை என்பவரின் ஆவணங்கள் அடங்கிய தபாலுறை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★

பலாலி - பருத்தித்துறை வீதியிலிருந்து திரு. நவராஜா என்பவரால் ஒரு திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## கலைவிழா

குட்டியப் புலம் அ.த.க பாடசாலையின் வளர்ச்சிக்காக மாபெரும் நாடகக் கலைவிழா புத்தூர் சோமாஸ் கந்தாக்கல்லூரிமைதானத்தில் இன்று பிற்பகல் ஏழு மணியளவில் நடைபெறவுள்ளது இந்தக் கலைவிழாவில் தைரியநாதன்குழுவினரின் ''அரிச்சந்திர மயான காண்டம்'' ''சத்தியவான் சாவித்திரி'' ஆகிய நாடகங்களும்சாந்தன் இசைக் குழுவின் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன.

## பல்கலைக்கழகத்துடன் ஆயுர்வேத கல்லூரிஇணைவு

(கொழும்பு)

கம்பஹா விக்கிரம ஆராச்சி ஆயுர்வேத கல்லூரி களனி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின்விஷேட அதிகாரத்திற்கு அமைய ஜனாதிபதி இம்முடிவை எடுத்துள்ளதாகவும் இதில் விக்கிரம ஆராச்சி கல்லூரி மாணவர்களின் நன்மை கருதி இம் முடிவை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மேற்கொண்டுள்ளார்.

## பாப்பரசர் கொழும்புவிஜயம் ஜனவரி 20-ல் இடம்பெறும்

(கொழும்பு)

பாப்பரசர் திருத் தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் திட்டமிட்டுள்ளபடி எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஜயத்தின் போது திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வண-பிதா...ளார். அத்துடன் பல்வேறு சமயத் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கத்தோலிக்கஆயர் மாநாட்டில் உரையாற்ற இருப்பதுடன் கத்தோலிக்க திருச்சபையின் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்த இருக்கிறார் என அறிவிக்கப்பட்டுளது. ஜனவரி 20 ம் திகதி பாப்பரசர் இரண்...

## பண்டிதமணியின் நூல் காலத்திற்கு தேவையானது

### உமாமகேசுவரன் தெரிவிப்பு

''மொழி வளம் குறைந்து காணப்படும் இக்கால கட்டத்தில் பாஷை இலக்கணம் இலக்கியம் கற்பித்தல் சம்பந்தமான பண்டிதமணி அவர்களின் நூல் வெளிவருவது ஆசிரியர்களுக்கும், பிள்ளைகளுக்கும் பெரும் வரப்பிரசாதமாகும் இந் நூலை வாசிப்பவர்கள் மொழி அறிவில் நிச்சயம் தேர்ச்சிபெறுவர்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் தொண்ணூற்றைந்தாவது பிறந்த தினத்தையொட்டி பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை வெளியீடு செய்து வைத்த பாஷை இலக்கணம், இலக்கியம் கற்பித்தல் நூலினை அறிமுகஞ் செய்துவைத்துப் பேசிய பண்டிதர் க உமாமகேசுவரன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பண்டிதை பொன்.பாக்கியம் தலைமையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம் பெற்ற இவ் விழாவில் பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் நூலினை வெளியிட்டு வைத்தார்.

திருநெல்வேலி ஞானப் பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபையின் தலைவர் திரு ஆ. மகாலிங்கம்தொடக்கவுரையும் சிவத் தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரையும் வழங்கினார்கள்.

''பண்டிதமணி பட்டங்களையோ புகழையோ தேடித்திரிந்தவர் அல்ல இவைதான் பண்டிதமணியை நாடி வந்து சிறப்புப் பெற்றன. அவரது எழுத்தும் பேச்சும் பொருள் பொதிந்தவை'' என்றார் சிறப்புரை வழங்கிய கவிஞர் இ. முருகையன் அவர்கள்.

பாஷை இலக்கணம், இலக்கியம் கற்பித்தல் நூலின் முதற் பிரதியை முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கமும் சிறப்புப் பிரதியை உரும்பிராய் இந்து சமய அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு. சி. சிவப்பிரகாசமும் பெற்றுக் கொண்டனர்.

பண்டிதமணிஅவர்களது உருவப்படமும், நூலும் விழாமண்டபத்துக்கு ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்பட்டதையடுத்து தேவார இசைமணி எஸ். ஆர். திருஞானசம்பந்தன்பஞ்சபுராணம் ஓதினார்.

எண்டிசையும் புகழ் பண்டிதமணி என்ற தலைப்பில் இயலிசை வாரிதி ந. வீரமணி ஐயர் கவிதையஞ்சலி செலுத்தினார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## மாபெரும் கண்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவின் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வருடாந்தம் நடத்தும் உற்பத்தி மற்றும் தொழில் நுட்பம் சார் கண்காட்சி இம்முறையும் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழீழ தேசத்தின் பொருண்மிய வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்ற மூளை வளம், மூலவளம், தொழில் நுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள அல்லது கண்டு பிடிக்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்களை மக்கள் பார்வையிட்டு அறிவு பெறும் நோக்கில் மாபெரும் கண்காட்சியாக இம்முறை வடிவமைக்கப்படவுள்ளது.

புதிய தொழில் நுட்பம், மற்றும் கண்டு பிடிப்புக்களை மேற் கொண்டவர்களும் மற்றும் முன் மாதிரியாக செய்கை பண்ணப்பட்ட பயிரினங்களை பயிரிட்டவர்களும், நல்லின கால்நடைகளை வளர்ப்பவர்களும் தங்கள் கண்டுபிடிப்புகள் மற்றும் உற்பத்தி முயற்சிகள் என்பவற்றை மக்கள் மத்தியில் பார்வைக்கு வைக்க விரும்பினால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மை செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாலஸ்தீன - இஸ்ரேல்

பெரும் நிதியும் மிஞ்சுவதற்று வாய்ப்பாக இருந்திருக்கும்.

ஆனால், அரசாங்கம் மேற்கொள்ளும் இந்நடவடிக்கையானது அரசியலமைப்பு எவ்வாறு இழிவுபடுத்தப் படுகின்றது என்பதற்கான உதாரணமே ஒழிய, தமிழ்மக்களைப் பொறுத்து ஏமாற்றத்தையோ அன்றி பதற்றத்தையோ கொடுக்கக் கூடிய தொன்றல்ல. ஏனெனில் தமிழ்மக்களைப் பொறுத்து சிறிலங்கா அரசின் சட்டங்கள் எப்பொழுதும் பாரபட்சமானவையாகவே உள்ளன.

இவை தவிர, தமிழ்மக்களுக்கெதிராக சிறிலங்கா அரசாங்கம் கடந்த காலத்தில் பல ஒடுக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வந்தது - அவை பின்னர் சிங்களவருக்கு எதிராகவும் பாவிக்கப்பட்டது வேறு விடயம் - இச்சட்டங்கள் தமிழ்மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மறுப்பவையாக இருந்ததோடு, அவை சிறிலங்கா அரசின் ஆயுதப் படையினருக்கு மிதமிஞ்சிய அதிகாரங்களையும் வழங்கின.

இதேசமயம் இவ்வகை ஒடுக்குமுறைச் சட்டங்கள் வழங்கிய அதிகாரங்களை மீறியும் சிறிலங்கா ஆயுதப் படையினர் நடந்து கொண்டதும் உண்டு. அதற்கும் சிறிலங்கா அரசாங்கம் ஏதோ ஒருவகையில் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்ததும் உண்டு. இதற்கென அரசாங்கம் கொடுத்த விளக்கங்கள் கேலிக்கிடமானவையாகவும், ஆத்திரத்தை ஊட்டுபவையாகவும் இருந்ததுண்டு.

ஆகையினால், அவசர காலச் சட்டம் நீக்கப்படுவது குறித்து தமிழ்மக்கள் மகிழ்ச்சி கொள்ளவோ, அன்றி அவசர காலச் சட்டம் நீக்கப்படினும் முன்னைய நடவடிக்கைகள் தொடரும் என்பதினால் அதிர்ச்சி கொள்ளவோ எதுவுமில்லை. அத்தோடு சிறிலங்கா அரசாங்கம் தானே இயற்றிய சட்டத்தை தானே மீறுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. சர்வதேச உடன்பாடுகள், சட்டங்கள், விதிகள் என்பனவற்றையே பொருட்படுத்துவதில்லை. ஆகையினால் தமிழ்மக்களும் அவர்களிடம் இருந்து பெரிதாகஎதையும் எதிர்பார்ப்பதில்லை.

ஆனால், சிறிலங்கா அரசின் இந்நடவடிக்கைகளைக் கருத்திற் கொள்ள வேண்டியவர்கள் சர்வதேச நாடுகளும், குறிப்பாக சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளும், நிறுவனங்களுமே ஆகும். சிறிலங்காவிற்கு ஜனநாயகத்தின் பேரில் உதவி வழங்குபவர்களுக்கு இது ஒரு நல்லதொரு பாடமாகும். சிறிலங்காவில் ஜனநாயகமும், மனித உரிமைகளும் எந்தளவிற்கு பேணப்படுகின்றன என்பதை விளங்கிக்கொள் இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஜயத்தின் போது திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வண-பிதா பிரான்சிஸ் வாஸ் அடிகளார் நினைவு சமய வைபவங்களை நடத்துவதுடன் ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசவுள்ளும் பேச்சுக்களை நடத்த இருக்கிறார் என அறிவிக்கப்பட்டுளது. ஜனவரி 20 ம் திகதி பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கொழும்புக்கு வருகைதரவுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வளத்தைபயன்படுத்துவதில் அனுபவங்களினூடு வளர்ச்சி

•எஸ். இராசதுரை

எந்த ஒரு நாடும் உரிமைக்காக போராடும் காலத்தில் அந்த தேச மக்கள் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடையாது விட்டால், போராடிப் பெற்ற சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது.

இவ்வாறு அண்மையில் வட்டக்கச்சி விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற கால்நடை முதலுதவிப் பயிற்சி வகுப்பின் ஆரம்பவிழாவில் உரையாற்றிய கிளிநொச்சி விவசாய பீட பயிரியல் துறைத்தலைவர் எஸ். இராசதுரை குறிப்பிட்டார்.

வன்னி மாவட்ட விலங்கு வேளாண்மைப் பகுதியினரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பயிற்சி வகுப்பில் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணிப்பாளர் பேசுகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த வேளையில், ஏனைய நாட்டவர்களும், எம் நாட்டவர்கள் சிலரும் தமிழீழம் கிடைக்குமானால் இங்கு என்ன வளம் உள்ளது என்றும் பனை வளத்தைத்தவிர வேறு ஏதும் இல்லையென்றும் வினாஎழுப்பியவேளையில், நாம் அன்று பதில் கூற முடியாது இருந்தோம். ஆனால் இன்று என்ன வளம் உள்ளது, எப்படி தற்போது பயன்படுத்தப் படுகிறது. மேலும் எதிர் காலத்தில் எப்படி பயன்படுத்துவது என்று பதில் கூறக் கூடிய நிலையில் நடைமுறை அனுபவங்களினூடாக வளர்ச்சி பெற்றுள்ளோம். என்றார்.

இவ் விழாவில் வன்னி மாவட்ட இணைப்பாளர், மாவட்ட காணி அதிகாரி சுப்பிரமணியம் கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்க செயலாளர் பொன். விநாயகமூர்த்தி, டாக்டர் எதிர்வீரசிங்கம், தேசிய தொழிற்பயிற்சி உத்தியோகஸ்தர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் நான்கு மணியளவில் அதிபர் ஆ. இரத்தினசிங்கம் தலைமையில் பாடசாலைமைதானத்தில் நடைபெறவுள்ளது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிக் கல்வி பணிப்பாளர் வ. தாளையா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி க. மோகனதாஸ், க. வை தனேஸ்வரன், மான்விழியாள், சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்-

## பரிசு வழங்கல்

யாழ். இலக்கிய வட்டம் தனது வெள்ளி விழா நிகழ்ச்சிகளை முன்னிட்டு நடாத்திய சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றோருக்கான பரிசு வழங்கல் வைபவம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு. எழுத்தாளர் ஒன்றியக் கட்டிடத்தில் நடைபெறும்

# பாலஸ்தீன - இஸ்ரேல் உறவுகளில் முட்டுக்கட்டை

(டெல்அவிவ்)

இஸ்ரேலுக்குள் கெரில்லாத் தாக்குதல்கள் நடத்தியமை தொடர்பாக இஸ்ரேலிய பொலிசாரால் தேடப்பட்ட நால்வர் காஸாவுக்குள் பிரவேசித்ததை தொடர்ந்து இஸ்ரேல் பாலத்தீனிய உறவுகளில் மீண்டுமொரு முட்டுக்கட்டை நிலை தோன்றியுள்ளது.

இந் நால்வரில் இருவர் பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தின் காருக்குள் இருந்தே காஸாப் பகுதியை அடைந்ததாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது. இச் செயலின் மூலம் பாலத்தீனிய விடுதலை இயக்கம் சமாதான உடன்படிக்கையை மீறியிருப்பதாக கூறியிருப்பதுடன் இது தொடர்பாக பாலத்தீனிய விடுதலை இயக்கத்திடம் கண்டனமும் தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வாறு கொண்டுவரப்பட்ட அனைவரும் வெளியேறும் வரை காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளுக்கான போக்குவரத்தை இஸ்ரேல் துண்டித்துள்ளது.

இதேவேளை பாலத்தீனிய அதிகாரிகளையும் இஸ்ரேல் காஸாவுக்குள் பிரவேசிப்பதிலிருந்து தடுத்து நிறுத்தியுள்ளது. பாலத்தீனிய விடுதலை இயக்கத்தின் செயல் நம்பிக்கைத் துரோகமானது எனவும் இஸ்ரேல் கண்டனம் தெரிவித்துள்ளது. எனினும் இவ்வாறு வந்ததாகச் சொல்லப்படும் நால்வரில் மூவர் ஏற்கனவே காஸாவிலிருந்து வெளியேறி விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜியத்துறைநடத்தைநெறி பேச்சு நடாத்த அழைப்பு

ராஜியத்துறையினரின் நடத்தை நெறியை செயற்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தப்படவேண்டுமென இந்திய வெளியுறவு செயலாளர் கே. சிறீனிவாசன் பாகிஸ்தானைக் கோரியுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவருடன் இது பற்றி பேச்சு நடாத்துவதை நிராகரித்ததுடன் இந்திய - பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்தில் இப் பேச்சுவார்த்தை நடாத்தப்படவேண்டுமெனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இரு நாடுகளின் தலைநகரங்களிலும் இருக்கும் தூதுவரக அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையில் இப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டியது அவசியம் எனவும் கே. சிறீனிவாசன் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த திங்களன்று பாகிஸ்தானிய ஏஜன்சிகளால் கைதாகி தாக்கப்பட்ட இந்திய தூதுவரகத்தை சேர்ந்த அதிகாரியான வி. எஸ். சௌகான் கடந்த வியாழனன்று புதுடில்லி வந்து சேர்ந்துள்ளார்.

மேலும் பாரத தேசிய மன்றத்தை சேர்ந்த பல தொண்டர்கள் கடந்த வியாழனன்று புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவரகம் எதிரே கூடி தூதுவரக அதிகாரியான வி. எஸ். சௌகான் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக கண்டனமும் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 07. 17**
**ஞாயிறு இரவு**

08. 01 ற்கு இசையரங்கம் நிகழ்ச்சியில் பாடுபவர் திருவி பி சாமி அவர்கள்
08. 20 ற்கு தாயகப் பாடல்கள்
08. 30 ற்கு செய்திகள்
08. 40 ற்கு தொடர்நாடகம். 'இலங்கை மண்' 32-ம் அங்கம்

**1994. 07. 18**
**திங்கள் காலை**

07. 02 ற்கு மாவீர வணக்கம்
07. 15 ற்கு மணியாரம்
07. 30 ற்கு செய்திகள்
07. 35 ற்கு பத்திரிகைச் செய்திகள்
07. 40 ற்கு தாயகப் பாடல்கள்.

பல்கலை. மாணவர்

## வதிவிட வசதிக்காக 10கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

பல்கலைக் கழக மாணவர் விடுதி வசதிக்காக ஜனாதிபதி நிதியிலிருந்து பத்து கோடி ரூபாவை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஒதுக்கியுள்ளார்.

சகல பல்கலைக் கழகங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள் இருப்பிடவசதியை உடனடியாக வழங்க ஆவன செய்யும் முகமாக இந் நிதி பல்கலைக் கழக மானியங்கள ஆணைக்குழுவுக்கு வழங்கப் படவுள்ளதாகவும்ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து சகல பல்கலைக் கழகங்களுடனும் தொடர்பு கொண்டு உடனடியாகமாணவர்களின் இப்பிரச்சினையைத்தீர்க்குமாறு ஜனாதிபதிபல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## "வணிகத்தளிர்", வெளியீடு

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் வர்த்தக மாணவர் மன்றத்தின் வணிகத் தளிர் சஞ்சிகை வெளியீடு நாளை காலை 11 மணிக்கு இடம் பெறவுள்ளது.

வெளியீட்டுவிழாவில் வர்த்தக முகாமைத்துவதுறைத் கலைவர் எம். நடராஜசுந்தரம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நுரை தியாகராஜா உட்பட பலர் கலந்து கொள்வர்

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

வழங்கும்

காவிச்செல்லும் உணவுப் பொட்டலங்கள் நண்பகல் 11.45 மணிமுதல் பிற்பகல் 3.45 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**விலை ரூ 27/50**

**மரக்கறி, இறைச்சி, மீன்**

எதுவானாலும்

**ஜெசித்தாரா,**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

(சி/9920)

**யாழ். ஸ்ரீதரில்**

**தினசரி 4. 00 மணி**

**உயிராயுதம்**

**தினசரி 6. 00 மணி**

## இன்று இறுதியாட்டம்

(வாஷிங்டன்)

உலகக் கோப்பை கால் பந்தாட்டப் போட்டியில், இன்றைய இறுதியாட்டத்தில் இத்தாலியும், பிரேசிலும் மோதுகின்றன

இத்தாலி பன்னிரண்டு வருடங்களுக்கு பின்னும் பிரேசில் இருபத்துநான்கு வருடங்களுக்கு பின்னும் உலகக் கோப்பையை வெல்வதற்கு போட்டியிடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது

காணாமல்போன

யும், விசாரணை முடிவுகளை வெளியிடும் படியும் மன்னிப்புச் சபை அவரைக் கேட்டுளது. எனினும் இது தொடர்பாக மேலதிக நடவடிச்கை எதுவும் எடுக்கப்பட்டதாக இது வரை தகவல் ஏதும் கிடைக்கப்பெறவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

வவுனியா

றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன

சில தினங்களுக்கு முன்னர் சேமமடுப் பகுதி காட்டிற்குள் பதுங்கியிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பொது மக்களில் மூவர் பலியானதும் ஒருவர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

இதற்கு முதல் நாள் பம்பைமடுவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் இரவோடு இரவாக கல்மடு பகுதி கிராமங்களுக்குள் நுழைந்து தமிழ் இளைஞர்கள் சிலரை தாக்கிவிட்டு, திரும்பிச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஏழுவருட இருண்ட காலத்திற்கு மீண்டும் செல்லப்போகிறீர்களா?

## ஐ. தே. க. வினர் கேள்வி

(கொழும்பு)

1970ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை நீங்கள் அனுபவித்த துன்பத்தை மீண்டும் அனுபவிக்கப் போகிறீர்களா? என்பதே ஐக்கிய தேசியக் கட்சியினரின் முக்கியமான கோஷியாக இருந்தது என பிபிஸி. சிங்கள சேவையின் செய்தியாளர் எல்மோ. பர்னான்டோ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக கூட்டம் நேற்று கண்டியில் ஆரம்பிக்கப்பட்ட போது அதில் உரையாற்றிய சகலரும் மக்களைப் பார்த்து இக் கேள்வியை எழுப்பினர்.

இக் கூட்டத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இதில் உரையாற்றிய சகலரினதும் கேள்வியாக 1970 - 1977 இல் மக்கள் இருள் வாழ்க்கை வாழ்ந்தனர் என்றும், மக்கள், தமக்கு வேண்டிய பொருள்களைக் கொள்வனவு செய்யக் கூடிய நிலை அன்று இருக்கவில்லை எனவும், எனவே பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிப்பதன் மூலம் மீண்டும் அந்த யுகத்திற்குச் செல்லப் போகிறார்களா? என்பதே இருந்தது என எல். மோ பர்னான்டோ குறிப்பிட்டார்.

## வெகுமதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் கல்வி ஊக்குவிப்பு வெகுமதி வழங்கல் வைபவம் எதிர் வரும் 20-ம் திகதி பிற்பகல் 2. 30 மணிககு வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் (உரும்பிராய்) சங்கக் தலைவர் மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுளது

இவ் வைபவத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்றமைக்காக சி. சோபிதா (மருத்துவம்), அ. நிருபா (மருத்துவம்), சு. நிசாந்தன் (சட்டம்) ஆகியோருக்கும் க பொ. த (சா/த) பரீட்சையில் 6 பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றமைக்காக கா. சசிகரனுக்கும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்றமைக்காகப அர்ச்சனாவுக்கும் வெகுமதி வழங்கப்படவுள்ளது.

ஐ தே க.

கலந்து கொண்டனர் மேலும் பல அமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதியினதும் அமைச்சர்களினதும் உரைகள் சந்திரிகா குமாரணதுங்காவை மையமாக வைத்தே நிகழ்ந்தன

இதேவேளை இக்கூட்டம் ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்

## வழிபாட்டு இடத்தை வீடாக்கிய அமைச்சர்

அம்பாந்தோட்டை வத்தஹென பகுதியில் அமைந்துள்ள ஹெரவெல என்னும் வழிபாட்டுத் தலமொன்றை பெருந் தெருக்கள் ராஜாங்க அமைச்சர் ஆனந்த குலரத்ன என்பவர் தனது உறவினர் ஒருவருக்கு குடியிருக்கும் இல்லமாக அமைத்துக் கொடுத்துள்ளார்.

காணி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள இவ் விழிபாட்டுத்தலம் பிரதேச மக்களின் முன்முயற்சியினால் கட்டியெழுப்பப்பட்டது இந் நிலையத்தில் ஒரு நூல் நிலையம் அமைந்துளளது அங்கு அடிக்கடி மக்கள் கலந்துரையாடல்கள் நடைபெறுவது வழக்கம் இக் கட்டடம் பழுதடைந்திருந்தபடியால், அரசு அதைத் திருத்தி மக்கள் பாவனைக்கு விடும் என சகலரும் எதிர்பார்த்திருந்த வேளையில் அமைச்சர் தன் உறவினருக்கு கொடுத்திருப்பதை ஆட்சேபித்துள்ள மக்கள வழிபாட்டுத்தலத்தை மீளப் பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

# தேர்தலை ஆட்சேபித்து மனித உரிமைமீறல் மனு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடைபெறுவதை ஆட்சேபித்து மற்றுமொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆவரங்காலைச் சேர்ந்த ஆ சின்னத்துரை உயர் நீதிமன்றில்மனித அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்தார்.

யுத்த சூழ்நிலையில் அங்கு தேர்தல் நடைபெறுவதுமனித உரிமையை மீறும் செயல் என அவர் தன் மனுவில் தெரிவித்துள்ளார். இந்த மனு மீதான விசாரணை உயர்நீதிமன்ற நீதிபதியால் மேற்கொள்ளப் படும்.

## கலைப் படைப்பாளிகளுக்கு கொலைப் பயமுறுத்தல்

கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு மூலம் கொலை மிரட்டல்கள் வந்துள்ளதாக கலை, இலக்கிய படைப்பாளிகள் தெரிவித்துள்ளனர்

சென்றபுதன்கிழமைகொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற கலை, இலக்கிய படைப்பாளிகள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இக் கொலை மிரட்டல் வந்துளள தாக தெரிய வருகின்றது

## ஐ. தே. க. செயலகம் முன் உறுப்பினர் ஆர்ப்பாட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ... யலைத் தயாரித்த செயற்

லெப். சீலன், வீரவேங்கை ஆனந்திற்கு

## மீசாலையில் நடந்த அஞ்சலி நிகழ்வுகள்

லெப்டினன்ட் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 11ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் இருவரும் வீரச்சாவு அடைந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவில் கொடிகாமம் வட்டப் பொறுப்பாளர் திரு. அமுதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் அவர்கள் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து லெப். சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் உருவப்படத்திற்கு அவர்களது பெற்றோர்கள் மலர் மாலை அணிவித்து ஈகைச் சுடரை ஏற்றினர். பொது ஈகச்சுடரை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தங்கன் அவர்களும், தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர் திரு. வீமன் அவர்களும் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து ஈகச் சுடரை ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் தேவர், விடுதலைப் புலிகளின் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, மகளிர் அமைப்பு பாரதி இல்லப் பொறுப்பாளர் திருமதி தமிழ்கவி ஆகியோர் உரையைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (86)

## மரண அறிவித்தல்



**வீரவேங்கை கௌதமி**

**(கந்தசாமி சாந்தி)**

அராலி தெற்கைச் சேர்ந்த வீரவேங்கை - கௌதமி (கந்தசாமி சாந்தி) அவர்கள் 12-07-94 அன்று வீரச்சாவடைந்தார். இவர், கந்தசாமி. சிவபாக்கியம் அவர்களின் அன்பு மகளும், இராசசுலோஜனா, சுந்தரலிங்கம், மலர்விழி, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். இவரின் இறுதிக் கிரியைகள் 15-07-94 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (8842)

தகவல்
இ. கந்தசாமி

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## உயிராயுதம்

தினசரி 6. 00 மணி
சனி, ஞாயிறு 10.30,
6. 00 மணி

JURASSIC PARK

(சி-9786)


பகுதி பொதுமக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரத்தை உள்ளடக்கிய கிராமப்புறப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் அச்சுறுத்தல்கள காரணமாக சில தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடம் தேடிச் சென்றிருப்பதாகவும் அறியப்படுகின்றது. (தி)


### ஜோ. எகட்டனின்
## ஜெசித்தாரா
### தரும் தோழமையுள்ள செய்தி

உங்களுக்குத் தேவையான மேலைத்தேய, கீழைத்தேய, உணவு வகைகளை உங்கள் நாவின் ரசனைக்கேற்ப கட்டளையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களை நேரில் அறியுங்கள்.

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

(சி-9919)


சந்திரிகா குமாரணதுங்காவை மையமாக வைத்தே நிகழ்ந்தன

இதேவேளை இக்கூட்டம் ஆரம்பிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் முப்பத்தி ஐந்து தனியார் பஸ் வண்டிகளில் வெளிமாவட்டங்களிலிருந்து மக்கள் அழைத்து வரப்பட்டதாகவும் முன்னாள் பாராளுமனற உறுப்பினர் ஐ.எம் காதர் இவர்களை அழைத்து வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

### தேர்தல்

பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு தகவல் தருமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பத்திரிகை

தேர்தல் அலுவலகத்திலேயே அரசின் உதவியுடன் இக்குழுக்கள் வேட்புமனு தாக்கல செய்திருந்தனர் என்பது தெரிந்ததே.

### கொழும்பிலிருந்து

தற்காக பெருமளவு வட பகுதி வாசிகள் அங்கிருந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஐ. தே. க. செயலகம் முன் உறுப்பினர் ஆர்ப்பாட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைச் செயலகமான சிறிகோததா முன் ஐ. தே. க. உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தினர் பேரணியில் கலந்துகொண்ட பெருமளவு ஐ. தே. க. உறுப்பினர்கள் இலைகளையும் பச்சை சேட்டுக்களையும் தீயிட்டுக் கொளுத்தி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஐ தே. க. தேர்தல் பட்டியலைத் தயாரித்த செயற்குழு உறுப்பினர்கள், தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஏ ஜே. ரணசிங்க, தொழில் ராஜாங்க அமைச்சர் நந்த மித்திர, மதுரபால எதிரிவீர, பி டி. சொய்சா, வில்சன் ஜெயவர்த்தனா ஆகியோரின் பெயர்களை நீக்கிவிட்டு, கட்சியை விட்டு வெளியேறிப் பின் இணைந்த காமினி திசாநாயக்கா, பிரேமச்சந்திரா ஆகியோருக்கு இடமளித்தமையை ஆட்சேபித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### யாழ்.

இதனிடையே இப்பிரச்சினை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு நாளை திங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### ஒருங்கிணைப்பு


வில் அமையும் என்றும் தேர்தல் வாக்களிப்பு நிலையத்தையும் எண்ணிக்கை மண்டபத்தையும் ஒன்றிணைப்பதே இந் நிலையத்தின் முக்கிய நோக்கமாகும் என்றும் கூறப்படுகிறது

### வால்வெள்ளி

இதேவேளை வியாழனுடன் ஷூமேக்கர் லெவி வால் வெள்ளி மோதவுள்ள இச்சமயத்தில் வியாழன் கோளில் கதிர் வீச்சு பத்துமடங்காக அதிகரித்துள்ளதாக ஜப்பானிய விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்

எனினும் இதனால் பூமிக்கு எப்பாதிப்பும் ஏற்படாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை கோடீஸ்வரன்
### (அமிர்தநாதன் பாலேந்திரன்)

தாயின் மடியில்:
12-03-72

இறைவன் அடியில்:
17-07-91

இந்நாளில் நினைவு கூருகின்றோம்

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(8843)

உனது பிரிவால் துயருறும்
அன்னைவேளாங்கன்னி
விளையாட்டுக் கழகம்


## மிக விரைவில்

தமிழோசை, இது எங்கள் தேசம், தாயகக் கனவு போன்ற வெற்றிப் படைப்புகளைத் தந்த

பொ. தாசனின் மற்றுமொரு பிரமாண்டமான படைப்பு

# இன்னும் ஒரு நாடு

(சி/9937)

தயாரிப்பு: முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது